"THAMILAN KURAL"
— MONTHLY —

CIRCULATED IN
SRI LANKA, INDIA,
BRITAIN, GERMANY,
FRANCE, U.S.A.,
MAURITIUS,
SINGAPORE, MALAYSIA,
MDDLE EAST,
AFRICAN STATES ETC.

# தமிழன் குரல்

**THAMILAN KURAL**

தமிழன் குரல் 2 | 1984 | அன்பளிப்பு தமிழீழத்தில் ரூபா 2 தமிழகத்தில் ரூபா 1

### இந்திராகாந்தி படுகொலை பின்னணியில் வெளிச் சக்திகள்

## இந்திரா மறைவு...



இமயமலை சாய்ந்து விட்டது.

நம்ப முடிகின்றதா?

ஆம். அரசியல் வாழ்விலும் பொது வாழ்விலும் இதாலய புகழ் பெற்ற இந்தியபிரதமர் திருமதி இந்திரா காந்தி மறைந்துவிட்டார்.

நம்பத்தான் முடியவில்லை.

ஆனாலும் இது நிதர்சனமான உண்மை.

ஜமுனா நதி தீரத்து சாந்தி வனத்திலே — அவரது பூதவுடல், பல இலட்சக் கணக்கான மக்கள் முன்னிலையில் எரிந்து சாம்பலாகி காற்றோடு காற்றாகக் கலந்து — காலத்தோடு காலமாக ஒன்றி விட்டது.

அணிசேரா நாடுகள் சமாதானத்தின் சின்னமாகவும், ஏகாதிபத்தியத்தின் எதிரியாகவும் விளங்கிய ஒரு தலைசிறந்த தலைவியை இழந்து விட்டன.

சோவியத் யூனியனும்இதர சோசலிச நாடுகளும் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கையின்பால் நாட்டங்கொண்ட ஒரு உற்றதோழியை இழந்து விட்டன.

உலகிலுள்ள ஒடுக்கப்பட்ட மக்களும் உரிமைக்காகப் போராடுகின்ற வர்க்கத்தினரும், தாபனங்களும் கூட தங்களுக்காக குரல் கொடுத்த ஒரு உண்மையான ஆதரவாளரை இழந்துவிட்டனர்.

இந்த அடிப்படையில் ஈழத் தமிழினமும். தமது பாதுகாப்பு அரணாக விளங்கிய ஓர் அன்னையை இழந்து விட்டது.

மொத்தத்தில் அகில உலகமுமே தீர்க்க தரிசனமும் செயல் உறுதியும் மிக்க ஒரு தலைசிறந்த அரசியல் வாதியை இழந்து விட்டது.

உண்மையில் திருமதி காந்தியின் மரணத்தில் அதிர்ச்சியும் வேதனையும் அளிக்கின்ற செய்தி என்னவென்றால், அவர் தனது சொந்த மெய்க்காப்பாளர்களான சத்வந்சிங், பியாந்சிங் ஆகிய இருவராலுமே சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றார் என்பதாகும்.

உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவை, தனது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வருவதற்கு, நீண்ட நெடுங்காலமாகவே அமெரிக்க ஏகாதிபத்தியம் முயன்று வந்திருக்கிறது. திருமதி இந்திரா காந்தி பிரதமராக இருந்தவரை அமெரிக்காவின் இந்த முயற்சி பலிக்கவேயில்லை. அதனால் இந்தியாவின் அண்டை நாடுகளான பாகிஸ்தானுக்கும், பங்களாதேசிற்கும் இப்போது சிறீலங்காவிற்கும் பெரும் அளவிற்கு நவீன ஆயுதங்களை வழங்கி இந்தியாவிற்கு அச்சுறுத்தலாக அந்த நாடுகளை வளர்த்து விடுவதில் அமெரிக்க ஏகாதிபத்தியம் கண்ணும் கருத்துமாக இருந்து வந்திருக்கிறது. அதே சமயம் தனது C. I. A. நிறுவனத்தின் ஊடாக இந்தியாவிற்குள் இரகசியமாக ஊடுருவி உள்நாட்டுக் குழப்பங்களையும்கலவரங்களையும் தூண்டி விடுவதற்கு அமெரிக்கா முயன்று வருவதாக முன்பே பல குற்றச் சாட்டுக்கள் எழுந்திருக்கின்றன. இந்நிலையில்—அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இக்கொலைக்கு பின்னால் இருக்கிறதென சோவியத்யூனியன்,கியூபா போன்ற நாடுகள் குற்றம் சாட்டியுள்ளது.

இந்திரா இருக்குவரை தெற்காசிய நாடுகளிலும். குறிப்பாக இந்து மகா சமுத்திரத்திலும் தனது ஆதிக்கத்தை செலுத்த முடியாதெனவும், இதன் மூலம் திருகோணமலை துறைமுகத்தில் இராணுவ தளத்தை அமைக்கும்முயற்சியும் நடைபெறுதென்பதையும் அறிந்த ஏகாதிபத்தியம் இந்திராவின் கொலைக்கு பின்னணியாக இருந்திருக்கின்றதென்பதில் ஐயமில்லை.

இக்கொலைகார கும்பல்கள் இந்திராவின் உடலையே அழித்தனர். ஆனால், இந்தியாவின் எழுபதுகோடிமக்களோடும், உழைக்கும்மக்களோடும், இரண்டறக் கலந்து விட்ட இந்திராவின் முற்போக்கு கொள்கைகளையும், இலட்சியத்தையும் அழித்து விட முடியாது.

## ஜெயவர்த்தனவுக்கு இந்தியப் பிரதமர் கண்டனம்!



புதுடெல்லி, நவ. 29: இலங்கை பிரதமர் ஜெயவர்த்தனேவுக்கு பிரதமர் ராஜீவ் காந்தி அவசரக் கடிதம் எழுதியிருக்கிறார்.

கொழும்புவில் உள்ள இந்திய தூதுவர் எஸ்.ஜே.எஸ். சேட்வால் அதிபர் ஜெயவர்த்தனேவை சந்தித்து, பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அனுப்பிய கடிதத்தை கொடுத்தார். கடிதத்தை கொடுத்து விட்டு வெளியே வந்த இந்திய தூதுவரிடம் நிருபர்கள் அனுப்பி, கடிதத்தில் கண்டுள்ள விரங்கள் பற்றி கேட்டார்கள். ஆனால் கடிதத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதைக் கூற இந்திய தூதுவர் மறுத்து விட்டார்.

### கண்டனம்

சமீபகாலமாக இலங்கை பிரதமரும் வேறு சில அமைச்சர்களும் இந்தியாவுக்கு எதிராக பேசி வருவதால், இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான நட்புறவில் சிக்கல் உருவாகி வருகின்றது. இலங்கை அமைச்சர்களின் இத்தகைய பேச்சுகளுக்கு பிரதமர் ராஜீவ் காந்தி கண்டனம் தெரிவித்து இக்கடிதத்தை எழுதியிருக்கலாம் என்று அரசியல் வட்டாரங்களில் நம்பப்படுகின்றது.

### இலங்கையில் போர் அபாயம்

இதற்கிடையில் போர் அபாயம் ஏற்பட்டு வருவதாக இலங்கையின் செய்தி மற்றும் சுற்றுலாதுறை அமைச்சர் பூச்சாண்டி காட்டியிருக்கிறார்.

இந்தியாவில் தமிழ்நாட்டில் தமிழீழ விடுதலை புலிகள் தங்கியிருந்து பயிற்சி பெற்று வருவதாகவும், வரும் ஜனவரி மாதம் 14-ம் தேதி வாக்கில் விடுதலை புலிகள் தமிழீழ விடுதலைக்காக இலங்கை மீது போர் தொடுக்க திட்டமிட்டு வருவதாகவும் அதை சமாளிக்க இலங்கை தன்னை தயார் படுத்திக் கொண்டிருப்பதாகவும் இலங்கை மந்திரி குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த போர் அபாயத்தை சமாளிக்க இலங்கை அரசு எல்லா வகையிலும் தன்னை தயார் படுத்திக் கொண்டிருப்பதாகவும் அவர் சொன்னார். ஆனால் என்னென்ன முன்னேற்பாடுகளை [illegible] இலங்கை அரசு செய்து கொண்டிருக்கிறது என்பதை அவர் தெரிவிக்கவில்லை.

> புரட்சியாளன் என்றால் கையில் ஆயுதம் எடுத்துப் போராடுவான் என்பது பொருளல்ல. புரட்சியாளன் எழுத்தினாலும் போராடுவான்.
>
> காண்டேகர்

தமிழன் குரல்
THAMILAN KURAL



# பிரதமர் ராஜீவ் காந்தி

திரு. ராஜீவ் காந்தி பாரதப் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதை நாம் தமிழீழத்தின் மக்கள் சார்பிலும் விடுதலைப் போராளிகளின் சார்பிலும் வாழ்த்தி வரவேற்கிறோம்.

மிக நெருக்கடியானதும் சோதனை நிறைந்தது மான ஒரு கால கட்டத்தில் திரு. ராஜீவ் காந்தி பிரதமர் பொறுப்பை ஏற்றிருக்கின்றார். ஏற்கனவே அவருக்கிருந்த கொலைமிரட்டல் இப்போது பகிரங்க மாகவே அதிகரித்திருக்கிறது. அதாவது பிரதமர் பதவியை ஏற்ற நாள் தொட்டே அவர் கொலை அச்சுறுத்தலை சவாலாகக் கொண்டு இந்தியாவை வழிநடத்த வேண்டியிருக்கிறது.

இந்தியாவைச் சுற்றிலும் பகைவர்கள் ஆக்கிர மிப்பைச் செய்யவும், தேசத்தையே கவிழ்க்கவும் ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். ஏகாதி பத்தியவாதிகளின் உளவு ஏஜன்சிகள் உள்நாட்டில் குழப்பங்களையும் கலவரங்களையும் தூண்டி விட்டு பெரும் நெருக்கடிகளை தோற்றுவித்து வருகின்றன.

இன்னமும் தீர்க்கப்படாத தமிழீழப் பிரச்சினை இந்திய அரசுக்குப் பெரிய பொறுப்பு மிக்கதாக இருக்கின்றது.

இந்த நிலையில் காங்கிரஸ் கட்சியைப் பலப் படுத்த வேண்டியதும், அணிசேரா நாடுகளுக்குத் தலைமை தாங்க வேண்டியதுமான கடமைகளும்கூட திரு. ராஜீவுக்கு இருக்கின்றன.

இந்தப் பொறுப்புகளையெல்லாம் மிகுந்த நிதா னத்துடனும் தொலை நோக்குடனும் அவர் கையாள் வார் என்பதில் சந்தேகமில்லை.

என்றாலும் உலக மேலாதிக்கத்தைப் பெறுவதற் காக இந்துமகாசமுத்திரத்தைத் தமது ஆளுகைக் குள் கொண்டுவர இந்தியாவைச் சீர் குலைக்க வேண் டும் எனத் தருணம் பார்த்திருக்கும் வெளிநாட்டுச் சக்திகளும், அதற்குத் துணை போகக்கூடிய உள் நாட்டு பிற்போக்கு—கைக்கூலிச் சக்திகளும், எல்லாச் சதி நடவடிக்கைகளையும் செய்தவாறு ராஜீவின் வீழ்ச்சியை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன.

எனவே எதிரிகளும் பிற்போக்கு சக்திகளும் காணும் கனவு நிறைவேறாதபடி ராஜீவ் காந்தியின் அரசை பலப்படுத்துவது பாரத மக்களின் கடமை என்பதனையும் விடுதலையுணர்வின் நாமத்தால் வலி யுறுத்த விரும்புகின்றோம்.

இந்த எமது அபிலாஷைகள் நிறைவேற்றுவ தற்காகவும், பாருக்குள்ளே நல்ல நாடாகப் பாரதம் திகழவும் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள்—

முற்போக்குச் சக்திகளை அரவணைத்துச்செல்வா ரென்றும், ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கைகளை வலிமைப் படுத்துவாரென்றும், இந்திய இனங்களுக் கிடையே சமத்துவத்தைப் பேணுவாரென்றும், பாரத மக்களின் பொருளாதார சுபிட்சத்துக்காகப் பாடுபடுவாரென்றும், இனவாதத்துக்கும், அடக்கு முறைக்கும், நவகாலனித்துவத்திற்கும், எதிராகப் போராடுவாரென்றும், உலக தேசிய விடுதலை இயக்கங்களை ஆதரித்து உதவுவாரென்றும், அனைத்து பிற்போக்குச் சக்திகளுக்கெதிராகச் செயற் படுவாரென்றும், உலக சமாதானத்திற்காகக் குரல் கொடுப்பாரென்றும் நம்புகின்றோம். இவ்வித உன்னத பாதையில் அவர் பாரத மக்களை வழி நடத்த வேண்டுமென்றும் மீண்டும் வாழ்த்தி வர வேற்கின்றோம்.

## யாழ்ப்பாணத்தில் ஐவர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணப் பகுதியில் 1-ம் திகதி நள்ளிரவு வேளை யில் ரோந்து சென்ற இராணுவத்தினர், ஐந்து அப்பாவித் தமிழர்களை சுட்டுக் கொன்றுள்ளனர். வீடுகளும், வேலிகளும் தீயிடப்பட்டுள்ளன. அச்சுவேலி கோனேஸ்வரன் வயது 21, இராசையா வயது 65, சிவஞானம் வயது 33, குமாரசாமி வயது 64 போன்றோரே சுட்டுக் கொல்லப்பட்டவர் களாவர்.

# "தமிழீழத்தின் குரல்" வானொலி மறைந்த பாரதப் பிரதமர் இந்திராகாந்திக்கு அஞ்சலி செலுத்தியது

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினால் நடாத்தப்படும் ''தமிழீழத்தின் குரல்'' வானொலி தனது வழக்க மான நிகழ்ச்சிகளை ரத்துச் செய்துவிட்டு மறைந்த பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்திக்கானசிறப்பு நினைவாஞ்சலி நிகழ்ச்சியை ஒருவார காலமாக ஒலிபரப் பியது.

சென்னையிலும் இவ்வொலி பரப்பை தெளிவாக கேட்கக் கூடியதாக இருந்தது. காலை 7 மணி முதல் 8 மணி வரை யும் மாலை 4 மணி முதல் 5 மணி வரையும் ஒலிபரப் பியது.

அன்னை இந்திராகாந்தி அவர்கள் எழுபது கோடி இந்திய மக்களுக்கு மட்டு மல்ல நாற்பது இலட்சம் இலங்கைத் தமிழர்களுக்குத் தாயாக விளங்கியவர் என் றும், அவரது இழப்பு இலங்கை தமிழர்களான எங்களுக்கு பேரிழப்பாகும் என்றும், பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் தமி ழீழ மக்கள் விடுதலைக் கழகத் தின் தோழர்கள் அனைவரை யும் அவர்களது அனைத்து வசிப்பிடங்களிலும், பயிற்சி முகாம்களிலும் கறுப்புக் கொடிகளை பறக்கவிடு மாறும், இலங்கை தமிழ் மக்கள் ஒருவார காலத்துக்கு பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாது துக்கம் அனுட் டிக்கும்படியும் ஒலிபரப்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

''ஆசியாவின் விடிவெள்ளி யாகவும், உலகின் ஒரு தலை சிறந்த தலைவராகவும் தமது தேசிய விடுதலைக்காக போராடும் மக்களின் அன் புக்கு பாத்திரமாகவும் விளங் கிய தலைவரை நாம் இழந் துள்ளோம். அவரது இழப்பு இந்திய நாட்டிற்கு மட்டு மல்ல அகில உலகிற்கும் அனைத்து விடுதலைஸ்தாபனங் களுக்கும் ஓர் இழப்பாகும்'' என்று தமிழீழ மக்கள் விடு தலைக் கழகத்தின் செயலதி பர் தோழர் உமா மகேஸ் வரன் (முகுந்தன்) தனது வானொலிச் செய்தியில் குறிப் பிட்டார்.

# அன்னை இந்திராவின் மரணச்செய்தி கேட்டு தமிழீழம் வரலாறு காணாத சோகமயம் ஸ்ரீலங்கா ராணுவம் களியாட்டம்

(எமது விசேட நிருபர்)

பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்ட செய்தி கேட்டு தமிழீழ மக்கள் தங்களின் பாதுகாப்பாக விளங்கிய அன்னையை இழந்த துயரத் தில் தமிழீழமே சோகக் கட லில் மூழ்கியது. யாழ்ப் பாணம், மட்டக்களப்பு, மன் னார், திருகோணமலை பகுதி களில் கறுப்புக் கொடி பறக்க விடப்பட்டன. அன்னை இந்திராவின் படமும் வீட் டுக்கு வீடு தொங்கவிடப் பட்டது.

யாழ் நகரில் பாடசாலைகள் கடைகள் பூட்டப்பட்டுபூரண ஹர்த்தால் நடத்தப்பட் டது. இக் ஹர்த்தாலில் ஈடு பட்ட இஸ்லாமிய தமிழ் மாணவன் அன்வர் ஸ்ரீலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப் பட்டான்.

இந்திராவின் மரணச் செய்தி எட்டியதும் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பட்டாசு கொளுத்தி களியாட்டம் நடத்தினர். யாழ்தேவி புகை யிரத வண்டியில் சென்ற இராணுவத்தினர் வீதிகளில் கொடிகளை ஏற்றிக் கொண்டி ருந்த மக்களை நோக்கி, சர மாரிமாக சுட்டதினால் பலர் கொல்லப்பட்டனர்.

மட்டக்களப்பு, திருகோண மலைப் பகுதிகளிலும் பூரண ஹர்த்தால் நடைபெற்றது.

## இலங்கைத் தமிழர்மீது விமானத் தாக்குதல்

அண்மையில் வடபகுதியில் நடைபெற்ற சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்கு தலைத் தொடர்ந்து ஸ்ரீலங் காவின் கூலிப்படையினர் தமிழ் மக்கள்மீது தமது காட்டுமிராண்டித் தனமான தாக்குதலைத் தொடங்கி யிருக்கின்றனர். சாவகச்சேரி, மற்றும் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் விமானங் கள் மூலமாக, சரமாரியாகக் குண்டு வீசித் தாக்கியுள்ள னர். இந்த விமானத் தாக்கு தலில் திருமதி ஆறுமுகம் நந்தினி, சாந்தினி ஆகிய 3 பெண்களும் நடராஜா என் பவரும் பலியாகியுள்ளார் கள்.



இவைகள் நினைவு ஸ்தூபிகள் என்று எண்ணிவிடாதீர்கள். கண்காணிப்பு பிரதேசக் கட லில் இருந்து மாதகல் கரை யில் கண்டெடுத்த பீரங்கிக் குண்டுகளே இவைகள்.

## மதுரை முத்துவுக்கு எமது அஞ்சலி

ஈழத்தமிழர்படும் இன்னல் கண்டு சட்ட மேல் சபையில் குரல் கொடுத்ததோடு அகதி களாக வந்த ஈழத் தமிழர் களுக்கு ஆதரவழித்த ஈழத் தமிழரின் உற்ற நண்பனை நாம் இழந்து விட்டோம்.

தமிழ்பற்றும்,இனைஉணர் வும் கொண்ட மதுரைமுத்து அவர்கட்கு, எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின் றோம்.

அன்னாரின் குடும்பத்தாருக் கும், அவர் சாந்துள்ள அ. இ. அ. தி. மு. க. சகோ தரர்களுக்கும் தமிழன் குரல் தமது வாசகர்களின் சார்பி லும் அனுதாபத்தை தெரி விக்கின்றது.

## மீண்டும் ஒரு இரத்த ஜூலாயா?

அண்மையில் தமிழீழ விடு தலைப் போராளிகளுக்கும் ஸ்ரீலங்காவின் கூலிப்படை யினருக்கும் இடையில் நடந்த மோதலையடுத்து இலங்கை யின் பல பகுதிகளிலும் இனக் கலவரம் தூண்டிவிடப்பட் டுள்ளது. இதன் விளைவாக பல தமிழர்கள் கொல்லப் பட்டுள்ளார்கள். தமிழர் களின் பல வீடுகளும் உடை மைகளும் தீக்கிரையாக்கப் பட்டுள்ளது. ஸ்ரீலங்காவின் இனவாத அரசின் பிரதமர் பிரேமதாசாவின் வீட்டுக்கு அருகிலுள்ள ஒரு தமிழரின் வீடு ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தபோது எரிக் கப்பட்டுள்ளது என்பதுகுறிப் பிடத்தக்கது. மீண்டும் ஒரு இரத்த ஜூலாய் ஏற் படுமோ? என்று தமிழ்மக்கள் நடுங்கிக் கொண்டிருக்கிறார் கள். இந்த வேளையில் வெளி நாட்டு உல்லாசப் பிரயாணி கள் இலங்கைக்கு வருவது தடை செய்யப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் அனுபவிக் கின்ற கொடுமைகளை வெளி யுலகு அறியக் கூடாது என் பதற்காகவே இந்த ஏற்பாட் டினை ஸ்ரீலங்காவின் பேரின வாத அரசு ஏற்படுத்தியுள் ளது.

## அரசின் கைக் கூலிகளின் அராஜகம்

பண்ணைக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற சுவாமி நாதன் அன்ரன் (25) (நாவந்துறையைச் சேர்ந்த வர்) கடலில் கண்டபொருளை தொட்டதனால் அதுவெடித்து படுகாயங்களுடன் கை துண் டிக்கப்பட்ட நிலையில் யாழ் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார். இது போலவே முன்பும் ஒரு தடவை நடை பெற்றது. இது அரசின் கை கூலிகள் போட்ட கன்னி செடிகளாகும். எனவே எமது மக்கள் கடலில் உள்ள எந்த விதமான பொருட்களையும் தொட வேண்டாம் என கேட்டுக் கொள்ளப்படுகின் றார்கள்.

## தமிழீழ மக்களுக்கு வேண்டுகோள்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் நோக்குடன் ஸ்ரீலங்கா இன வாதஅரசு தனது புலனாய்வுத் துறையில் உள்ளவர்களை அசல் இயக்கத் தோழர்கள் போலவே தமிழ் பேசவைத் தும், நடை, உடை, பாவனை கள் பயிற்றுவித்தும் மக்கள் மத்தியில் அனுப்பப்பட்டுள் ளது இவ்விடையம் பற்றி எமது மக்கள் எச்சரிக்கை யோடு இருப்பதுடன் இது பற்றி தகவல் கிடைத்தால் கழகத் தோழர்களுக்கு அறி வித்து தங்கள் பங்களிப்பைச் செய்யுமாறு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தனது தமிழீழத்தின் குரல்வானொலி மூலம் கேட்டுள்ளது.

# கண்ணீர் அஞ்சலி!

யாழ்க்குடா நாட்டின் கொக்குவில் கிராமம் பெற்றெடுத்த வீர மறவனும், "தமிழீழ விடுதலை இராணுவ" இயக்கத்தின் தளபதிகளில் ஒருவரும், கடந்த ஐப்பசி மாதம் 10-ம் திகதி மயிலிட்டி என்னும் இடத்தில், சிறீலங்காவின் கூலிப்படையினரோடு நேருக்கு நேர் நின்று சமர் புரிந்து வீரமரணமடைந்தவருமான தோழர் சோ. ஜெயப்பிரகாஸ் அவர்களுக்கு



ஜெயப்பிரகாஷ்,

எமது கண்ணீர் அஞ்சலியைக் செலுத்திக் கொள்கின்றோம்.

இவர் தமிழீழ விடுதலை இராணுவத்தின் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவராவார். இவர் படிக்கும் போதே இனஉணர்வு மிக்கவராக விளங்கினர். தமிழினத்திற்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளைத் தாங்க முடியாமல் துடித்தெழுந்தார். படிக்கும்போதே தமிழீழ விடுதலைக்குப் பணியாற்ற வேண்டுமென்ற எண்ணத்தோடு தன்னை ஒரு பகுதி நேர விடுதலை வீர



ரவீந்திரன்,

ணுக்கிக் கொண்டார். ஓய்வு இன்றி உழைத்தார். தனது தலைவன் "ஒபரேய் தேவன்" அவர்கள் காட்டிய பாதையிலே வீறு நடை போட்டார். தோழர்களோடு அன்பாகவும், ஆதரவாகவும் பழகினர். இவரைக்கண்ணன் என்றே தோழர்கள் அன்புருக அழைத்தனர்.

பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருக்கும்போது துண்டுப் பிரசுரங்களை பொது மக்களுக்கு விநியோகித்துக் கொண்டிருக்கையில் ஒருநாள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார். அளவுக்கதிகமான சித்திரவதைகளை



முத்துராசா,

அனுபவித்தார். வெலிக்கடை மனித வதைமுகாமில் அடைக்கப்பட்டார்; ஆக்கினைகள் செய்யப்பட்டார். எனினும் 1983 ஜூலைக் கலவரத்தில் வெலிக்கடையில் 53 தமிழீழப் போராளிகள் கொல்லப்பட்ட போது பிழைத்துக் கொண்டார்.

வெலிக்கடைப்படுகொலைக்குப் பின்னர் மட்டக்களப்புச் சிறைச் சாலைக்கு மாற்றப் பட்டார். மட்டக்களப்பு சிறை உடைப்பில் தன்னலான பங்களிப்புகளைச் செய்தார். எல்லாப் போராளிகளையும் மீட்டெடுக்கின்ற பணியிலும் ஒத்துழைத்தார். சிறையுடைப்பிற்குப் பின் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

இவர் வெளி நாடொன்றிலே இராணுவப் பயிற்சி பெற்று "தமிழீழ விடுதலை இராணுவ" இயக்கத்தின் தோழர்களுக்குப் பயிற்சியளித்தார்.

தோழர் ஜெயப்பிரகாஷ் அவர்கள் ஒரு விடுதலை வீரன் மட்டுமல்ல சிறந்த கலைஞரும் ஆவார். தமிழ் நாட்டிலே தமிழீழ விடுதலை இராணுவத்தினரால் நடத்தப்பட்ட "இதயக்குமுறல்" எனும் நாடகத்தில் பங்கேற்று நடித்துள்ளார்.

அண்மைக் காலத்தில் தமிழீழ விடுதலை இராணுவம் நடத்திய தாக்குதல் சம்பவங்களில் பெரும்பங்கேற்ருர். கடந்த ஆடி மாதம் 17-ம் திகதி காங்கேசன் துறையில் அதிரடிப்படைப் பொலிஸ் அதிகாரி மீது நடத்திய அதிரடித் தாக்குதல், கடந்த புரட்டாதி மாதம் 17-ம்திகதி கிளிநொச்சிப் பொலிஸ் ஜீப் வண்டியைத்தகர்த்து நான்கு கூலிப்படை வீரர்களைச் சுட்டுக் கொன்றது போன்ற இன்னேரன்ன நிகழ்ச்சிகள் தோழர் ஜெயப்பிரகாஸ் அவர்களின் பெரும் பங்களிப்பினுல் நடந்தேறியவையாகும்.

தோழர் ஜெயப்பிரகாஸ் அவர்கள் இறுதியாகக்கடந்த ஐப்பசி மாதம் 10-ம் திகதி மயிலிட்டி என்னுமிடத்தில் இராணுவத்தினரோடு நேருக்கு நேர் சமர் புரிந்து வீரமரணமடைந்தார். இவரது தாக்குதலால் ஸ்தலத்திலேயே மூன்று சிங்கள இராணுவத்தினர் மாண்டனர்; இன்னும் பலர் காயமடைந்தனர்.

எதிரியின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகித் தாய் நாட்டின் மடியிலே சாய்ந்து கிடந்த— தோழர் ஜெயப்பிரகாஸ் அவர்களின் உடலைத் தூக்குவதற்காக முயற்சித்த போது—தோழர் ரவீந்திரன் அவர்களின் கால்கள் குண்டுக் காயங்களுக்கு இலக்காகின. இதனுல்நடக்க முடியாத அவரை இராணுவத்தினர் கைது செய்ய முனைந்த போது "சயனைட்" விஷம் அருந்திக்களத்திலேயே வீரமரணம் அடைந்தார். இவர் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவராவார். இவரும் வெளிநாட்டிலே பயிற்சி பெற்று அண்டைக்காலத் தாக்குதல் சம்பவங்களில் பெரும் பங்கேற்றமர், இவர் இளையவரானுலும் ஒரு அனுபவமிக்க போராளியாகவே விளங்கினர். இவரை "பாலு" என்றே தோழர்கள் பாசத்தோடு அழைத்தனர். அந்தப் பாசமிக்கபருவஇளைஞன் பாலுவின் பூதவுடல் பூமியிலே சரிந்து விட்டது.

ஸ்ரீலங்கா கூலிப்படையினரின் அட்டூழியங்களைப் பொறுக்க-முடியாது-விடுதலை வீரனுகக் களத்தில்இறங்கிய-பாபு என அழைக்கப்படும் தோழர் முத்துராசா அவர்கள் கைது செய்யப்பட்டு உயிரோடு தீயிலிட்டு எரிக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் மூவருக்கும்எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்திக் கொள்கின்றோம்.

எமது தோழர்களின் உடல்கள் அழிந்தாலும் அவர்களது நினைவுகள் என்றுமே மறையப் போவதில்லை. அவர்களின் இலட்சியங்களும் என்றுமேஅழியப் போவதில்லை.

## "சென்னை பெரியார் திடலில் ஈழத் தமிழர்கள் இந்திராவிற்கு அஞ்சலி"

சென்னை பெரியார்திடலில் இம்மாதம் 11-ம் திகதி ஈழத் தமிழர்கள் இந்திரா காந்தியின் மறைவிற்கு அஞ்சலி செலுத்தும் விதத்தில் அஞ்சலி கூட்டம் நடாத்தப்பட்டுள்ளது. இக் கூட்டத்தை தமிழ் தகவல் நிலையத்தினர் ஒழுங்கு செய்திருந்தனர்.

இக்கூட்டத்திற்கு தமிழ் தகவல் நிலையத்தின் சார்பில் டாக்டர் ஜெயகுலராஜா தலைமை வகித்தார். இக் கூட்டத்தில் தமிழீழ மக்கள் விடுதலை கழக செயலதிபர் உமாமகேஸ்வரன் உரையாற்றும் போது இந்திரா காந்தியின் இழப்பு இந்திய மக்களுக்கு மட்டுமல்ல, உலகின் முற்போக்கு சக்திகளுக்கும், தேசிய விடுதலை இயக்கங்களுக்கும், உழைக்கும் மக்களுக்கும் பெரிய இழப்பாகுமென்ருர்.

இந்திரா காந்தி ஈழத் தமிழர் பிரச்சினை தீர்ப்பதற்காக மேற்கொண்டஅனைத்து நடவடிக்கைகளையும் தமது கழகம் ஏற்றுக்கொண்டிருந்ததென்றும் கூறினர். இந்திராவின் இழப்பு தெற்காசியாவிலும், இந்துமகா சமுத்திரத்திலும் ஓர் ஸ்திரணமற்ற தன்மையை உருவாக்கியுள்ளதென்றும் ஏகாதிபத்தியசக்திகளே இப் படுகொலையின்பின்னணியில் செயல்பட்டுள்ளதென்றும் திருமதி. காந்தியின்-செயல்களை-அவர் செய்து முடித்த சாதனைகளை பட்டியல் போட்டுக் காட்டி வீராவேசமாகப் பேசிவிட்டுச் செல்வது-அவருக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாக இருக்க முடியாதென்றும் தமிழீழ் மக்களின் விடுதலைக்காகப் போராடும் அனைத்து விடுதலை இயக்கங்களும், முற்போக்குச் சக்திகளும்ஒருங்கிணைந்து. தமிழீழ விடுதலையை வென்றெடுத்து, ஏகாதிபத்தியச் சக்திகளை முறியடிப்பதே நாம் அவருக்குச்செலுத்தும்உண்மையான அஞ்சலியாகுமென்றும் குறிப்பிட்டார்.

இவ் அஞ்சலி கூட்டத்தில் கழகத்தின் பிரச்சாரசெயலர் இரா. வாசுதேவன் உரையாற்றும் போது, இந்திராவின் அஞ்சலி கூட்டத்திலாவது ஈழத்திற்காகபோராடும் அனைத்து இயக்கங்களும் ஒன்று சேர்ந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறதென்றும். ஈழத் தமிழர்களின் விடுதலைக்காக போராடுகின்ற அனைத்து விடுதலை இயக்கங்களும் இக்கால கட்டத்தில் நிதானமாகவும், பொறுமையுடனும் செயல்பட்டு-குறைந்தபட்ச பொது உடன்பாட்டிற்கு வந்து, தமிழீழ குடியரசை நிறுவுவதன் மூலம், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் திருமலை துறைமுகத்தைதளமாக்கும் திட்டத்திற்கும் தென்கிழக்காசியாவில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும், சாவு மணி அடிப்பது தான் நாம் உண்மையில் இந்திராகாந்திக்கு செய்யும் அஞ்சலியாகுமென்ருர்.

இக்கூட்டத்தில் தமிழர் விடுதலை கூட்டணி 'செயலதிபர் அ. அமிர்தலிங்கம், தலைவர் மு. சிவசிதம்பரம் யோகேஸ்வரன், கரிகாலன், மற்றும் தமிழீழ மாணவர் பேரவை அசோகன், E.P.R.L.F., EROS. TELO சார்பில் ஈழமணி ஆகியோரும் உரையாற்றினர்.

## இளைஞனின் சடலம் கடத்தல்

வவுனியா, மாங்குளம், பகுதிகளில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர் வன்னேரிக் குளத்தில் திடீர் சோதனை மேற்கொண்டபோது நாதன் எனும் இளைஞர் சுட்டுக்கொல்லப்பட்டு இவரது சடலம் இராணுவத்தினரால் கிளிநொச்சி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டது.

ஆனுல் அத்துமீறி பிரவேசித்த இளைஞர்கள் சடலத்தை எடுத்துச் சென்று விட்டதாகவும், இதுபற்றி போலிஸாரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. இளைஞர் தங்கியிருந்த வீட்டிலிருந்து பொலீசார் தொலைபேசி, மோட்டார் சைக்கிள் என்பவற்றை கைப்பற்றியதாகவும் தெரிகிறது.

## ஊரெழுவில் குடும்பமே சுட்டுக்கொலை இராணுவத்தின் காட்டுமிராண்டித்தனம்

2—11—84 அன்று யாழ்ப்பாணத்தில் உள்ள ஊரெழுவில் சீருடையில் சென்ற இராணுவத்தினர் யாழ் பல்கலைக் கழக ஊழியரான தம்பாப்பிள்ளைகந்தசாமி(56) அவரது மகன்களான யாழ் பல்கலைக்கழக மாணவனை தவக்குமார் (23) என்பவர் மற்றமகனைசூரியகுமார்(18) சுட்டுக் கொன்றனர். அத்தோடு அவர்களது வீட்டு வேலைக்கார சிறுவனையும் சுட்டுக்கொன்று தங்கள் காட்டுமிராண்டித்தனத்தை காட்டியுள்ளனர்.

உரும்பராய், வளளாய் பகுதிகளில் வீடுகளை தீக்கிரையாக்கியது ஸ்ரீலங்காஇராணுவம்.

கோப்பாய் தொகுதியான உரும்பராய், வளளாய்ப் பகுதியை முற்றுகையிட்ட ஸ்ரீலங்காவின் கூலிப்படை நூற்றுக்கணக்கான வீடுகளை தீயிட்டும், மக்களை துன்புறுத்தியும் சென்றுள்ளனர்.



அன்னை இந்திராவின் அஞ்சலிக் கூட்டத்தில் தமிழீழமக்கள் விடுதலைக்கழக பிரச்சாரச் செயலர் தோழர் இரா. வாசுதேவா செயலதிபர் தோழர் உமா மகேஸ்வரன் அவர்களும் உரையாற்றுகின்றனர்.

# மலையகத் தமிழர்கள்



### அறிமுகம் :

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் 37.5 இலட்சம் பேராகும் (1981). இது இலங்கையின் மொத்தக் குடித்தொகையில் 25.3 சதவீதமாகும். இலங்கையில் தமிழ் பேசும் மக்களை இலங்கைத்தமிழர், இந்தியத் (மலையகத் தமிழர்,) முஸ்லிம்கள் என மூன்று விதமாக வகைப்படுத்தும் வழக்கம் பிரித்தானியர் ஆட்சிக்காலத்திலிருந்தே இருந்து வருகின்றது. 1981ஆம் ஆண்டு குடித்தொகைக் கணக்கின்படி இலங்கைத் தமிழர் 18.7 இலட்சம் பேராாகவும் (12.6%), இந்தியத்தமிழர்8.3 இலட்சம் பேராகவும் (5.6%), முஸ்லிம்கள் 10.6 இலட்சம் பேராகவும் (9.1%) காணப்பட்டனர்.

### பரம்பல்

இலங்கைத் தமிழரில் 73 சதவீதத்தினர் தமிழீழம் என்று வழங்கப்படும் வடக்கு கிழக்குமாகாணங்களில் வாழ்வதைப் போல இந்தியத் தமிழரில் 75 சதவீதத்தினர் நுவரெலியா (30 %), பதுளை (16 ஐ), கண்டி (13 %) இரத்தினபுரி (11 %), கேகாலை (5 %) ஆகிய ஐந்து மலையகப் பெருந்தோட்ட மாவட்டங்களில் பரந்து வாழ்கின்றார்கள். இதனாலேயே இவர்கள் இலங்கை மலையகத் தமிழர் என அழைக்கப்படுகின்றனர்.

சிங்களவர் பெரும்பான்மையாக வாழ்கின்ற இம் மாவட்டங்களின் மொத்த குடித்தொகையில் மலையகத் தமிழரின் தொகை 15 சதவீதமேயாகும். தேயிலைப் பெருந்தோட்டப் பகுதிகளாகியநுவரெலியா, பதுளை ஆகிய மாவட்டங்களிலேயே இவர்கள் குறிப்பிடத்தக்க அளவு செறிவாக வாழ்கின்றனர். நுவரெலியா மாவட்டத்தின் மொத்தக் குடித் தொகையில் மலையகத் தமிழரின் எண்ணிக்கை 48 சதவீதமாகவும், பதுளை மாவட்டத்தில் 21 சதவீதமாகவும் அமைகின்றது. பெருந்தோட்டங்கள் மலையகப் பகுதி முழுவதும் பரந்து காணப்படுவதால் இவர்கள் பாதுகாப்பு கருதி ஒருசில மாவட்டங்களில் செறிந்து வாழக்கூடிய தன்மை அரிதாகவே உள்ளது.

எனினும் மேற்படி இரு மாவட்டங்களிலும் சிற்சில பகுதிகளிலாவது பெரும்பான்மையாகவும், செறிவாகவும் வாழக்கூடிய நிலைமைகளை இவர்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டும். மொழி, கலாசாரம் என்பனவற்றைப் பேணிக் கொள்வதற்கும், தமக்குள்ளே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கும், பாதுகாப்பிற்கும் இது இன்றியமையாததாகும்.

### வரலாறு

இலங்கையின் மத்திய மலைப்பகுதிகளில் 19-ஆம் 20-ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பியரால் விருத்தி செய்யப்பட்ட கோப்பி, தேயிலை, இரப்பர் பெருந்தோட்டங்களில் தொழில் புரிவதற்கென தென்னிந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்டு குடியமர்த்தப்பட்ட தமிழ் மக்களே இந்தியத் தமிழர் அல்லது மலையகத் தமிழர் என வழங்கப்படுகின்றனர்.

1804-ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டின் திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களிலிருந்து பொருளாதாரத்தில் நலிவுற்றும் நசுக்கப்பட்டுமிருந்த மக்களைப் பெருந்தோட்டக் கூலிகளாகக் கொண்டு வரும் வழக்கம் ஏற்பட்டது. இதனால் அக்காலத்தில் இந்தியத் தமிழரது குடித்தொகை இலங்கையில் அதிகரித்து வந்தது. சில தரசுகளின்படி 1837ல் 10,000 பேரும், 1911-ல் 5,21.000 பேரும், 1921ல் 6,02,700 பேரும் 1931ல் 8,17,000பேரும் இலங்கையில் வாழ்ந்தனர்.1930-ம் ஆண்டில் பின்னர் தென்னிந்தியத் தொழிலாளரின் வருகை பெருமளவு குறைந்துள்ளது இதற்கான முக்கிய காரணிகள், இந்திய அரசு தொழிலாளர் வெளியேற்றம் தொடர்பாகக் கொண்டுவந்த தடைச் சட்டமும், இந்தியத் தமிழரின் வருகையைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று கோரிக்கைகளை சிங்களத் தலைவர்கள் அரசியல் பிரச்னையாக்கியதுமேயாகும்.

1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து ஏலவே பொருளாதார, சமூக நிலைகளிற் துன்புறுத்தப்பட்ட இந்தியத் தமிழர் அரசியல் ரீதியாகவும் ஆபத்துக்குள்ளாகத் தொடங்கினர். 1947இல் வாக்குரிமை பெற்றிருந்து ஏழு நாடாளுமன்றப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்த இம்மக்கள் 1949இல் இயற்றப்பட்ட குடியுரிமைச் சட்டத்தின் மூலம் வாக்குரிமையை இழந்ததோடு "நாடற்றவர்" களாகவும் மாற்றப்பட்டனர். சுதந்திர இலங்கையின் முதல் அரசியல் தாக்குதல் இந்தியாவுக்கு எதிரானதாகவே அமைந்ததை இந்நடவடிக்கை சுட்டிக்காட்டுகின்றது. மேற்படி குடியுரிமைச்சட்டம் இந்தியத் தமிழரைப் புதிதாகக் குடியுரிமை கோரி விண்ணப்பிக்கும்படி கோரியது. இக் கோரிக்கைக்கு இணங்க 8,25,000 மலையகத் தமிழர் விண்ணப்பித்தனர். அவ் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்யும் பணி 1962 வரை நீடித்தது. விண்ணப்பித்த மொத்தம் 8,25,000 பேரில் 1,34,188 பேருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கப்பட்டது. அதே காலத்தில் இவர்களிற் பலர் இந்தியக் குடியுரிமை கோரி விண்ணப்பித்தனர். இவ்வாறு விண்ணப்பித்தவர்களில் 2,25000 பேருக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட்டது. இலங்கையிலும் இந்தியாவிலும் குடியுரிமை வழங்கப்படாதவர்கள் "நாடற்றோர்" என நாமஞ் சூட்டப்பட்டனர். இவ்வாறு நாடற்றோராகக் கருதப்பட்ட இந்திய வம்சாவழித் தமிழரின் மொத்தத் தொகை ஏறத்தாழ 9,75,000 ஆகும்.

### உடன்படிக்கைகள்

நாடற்றவர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 1950 முதல் இந்திய—இலங்கை அரசுகள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவந்தன. 1953-ல் டட்லி சேனநாயக்காவுடனும் 1954-ல் ஜோன் கொத்தலாவலையுடனும் நேரு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டாரெனினும் இதற்கு முடிவு காணப்படவில்லை.

ஆனால் 1964-இல் ஏற்படுத்தப்பட்ட சாஸ்திரி—சிறிமா ஒப்பந்தத்தின் மூலம் நாடற்றோர் பிரச்சினையில் ஓரளவு "தீர்வு" காணப்பட்டது. அவ் ஒப்பந்தத்தின்படி 9,75.000. நாடற்றோரில் இயற்கை பிறப்புத் தொகை அதிகரிப்பு உட்பட 5,25,000 பேரை இந்தியா அழைத்துக் கொள்வதென்றும், இயற்கை பிறப்புத் தொகை அதிகரிப்பு உட்பட 3,00,000 பேருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இது 15 வருட காலத்தில் அமுலாக்கப்பட வேண்டுமெனவும் காலஎல்லை வகுக்கப்பட்டது. மிகுதி 1,50,000 பேரின் எதிர்காலம் பின்னர் தீர்மானிக்கப்படும் எனவும் அவ் ஒப்பந்தம் மேலும் கூறிற்று.

பின்னர்1974-இல் ஏற்பட்ட இந்திரா—சிறிமா உடன்படிக்கையின்படி இயற்கை பிறப்புத் தொகை அதிகரிப்பு உட்பட 75,000 பேருக்கு இந்தியா குடியுரிமை வழங்குவதெனவும், 75,000 பேருக்கு இலங்கை குடியுரிமை வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தங்களின் மூலமாக மொத்தம் 9,75,000 பேரில் 6,00,000 பேர் இந்தியக் குடியுரிமை பெறவும் வழியேற்பட்டது. இதன்படி 7 பேர் இந்தியக் குடியுரிமை பெற்றால் 4 பேர் இலங்கைக் குடியுரிமை பெறுவார்கள் என வகுக்கப்பட்டது.

மேற்படி ஒப்பந்தத்தின் 15 வருட கால எல்லை 1979-இல் முடிவடைந்தபோது 3,45,000 பேர் இந்தியக் குடியுரிமைபெற்றும் 1,60,000 பேர் இலங்கைக் குடியுரிமை பெற்றும் இருந்தனர். நாடற்றோரின் தொகை 5,05,000 ஆகும்.

தற்பொழுது ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க இந்தியா மறுத்துள்ளது. நாடற்றோர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படுமென்று இலங்கை அரசின் தற்போதைய ஜனாதிபதி வாக்குறுதி அளித்துள்ளார்.

1983 யூலை இனக்கொலையில் பெருமளவு பாதிக்கப்பட்டோர் மலையகத் தமிழரே, இவர்களின் பிரதிநிதிகள் "மலையகத் தமிழ் மக்கள் அனைவரும் பாதுகாப்புக் கருதி இந்தியா வர எண்ணுகின்றார்கள்" என அறிவித்தார்கள். இந்திய அரசு இதற்கு மறுப்புத் தெரிவித்தது.

எனவே மலையகத் தமிழர் பிரச்னை இலங்கைக்குள்ளேயே தீர்க்க வேண்டிய பிரச்னையாக இன்று மாறியுள்ளது,

### உடன்படிக்கை பற்றிய மதிப்பீடு

இலங்கை-இந்திய ஒப்பந்தங்கள் அனைத்தும் இலங்கைக்குச் சாதகமாகவே அமைந்துள்ளதை எவரும் எளிதில் புரிந்து கொள்வர்.

"இலங்கையின் நட்புறவுக்காக இந்திய அரசு தமிழ் மக்களைப் பலிகடாக்களாக்கியதே ஒப்பந்தத்தின் பெறுபேறு'! எனவும இது விமர்சிக்கப்பட்டது. நடுநிலையாளர் பலரும் மேற்படி ஒப்பந்தங்கள் நீதியற்றவை என்றும், மலையகத் தமிழருக்கு அநீதி இழைத்தவை என்றுமே கருத்துத் தெரிவித்தனர். பின்வரும் காரணங்கள் அக்கூற்றுக்களை உறுதிப்படுததுகின்றன.

1. இலங்கையை ஆண்ட அன்றைய பிரித்தானிய அரசின் அனுமதி பெற்றே தோட்ட முதலாளிகள் தமிழ்நாட்டில் வாழ்ந்த இத் தொழிலாளர்களின் பொருளாதார பலவீனத்தைப் பயன்படுத்தி அவர்களைக் குடிபெயர்த்து இலங்கைக்குக் கொண்டுவந்தனர்.

2. தோட்டத் தொழிலாளர்கள் உள்ளூர் (சிங்கள) தொழிலாளர்களுக்குப் போட்டியாகக்கொண்டுவரப்படவில்லை, உள்ளூர்த்தொழிலாளர்கள் பெருந்தோட்ட வேலைகளுக்கு மறுப்புத் தெரிவித்த பின்னரே இவர்கள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டனர்.

3. அப்படிக் கொண்டு வரப்பட்ட தொழிலாளரின் பரம்பரையினரே (இரண்டு, மூன்று தலைமுறையினரே) இன்று இலங்கையில் இருக்கின்றனர். இவர்கள் இலங்கையில் பிறந்தவர்களே. பாட்டன். முப்பாட்டன் வந்ததற்கு இத் தலைமுறையினர் தண்டிக்கப்படுவது நியாயமானதல்ல.

4. மலையகமக்களின் எதிர்காலம் இலங்கை, இந்திய அரசுக்களால் மட்டுமே தீர்மானிக்கப்பட்டது. அவர்களது கருத்துக்கள், பொருளாதாரம், சமூகநிலை, கல்வி, கலாசாரம் போன்றன பேச்சுவார்த்தைகளின்போது புறக்கணிக்கப்பட்டன, அது மாத்திரமன்றி மலையகத் தமிழர்களுக்கு தமது எதிர்காலத்

8 ஆம் பக்கம் பார்க்க

## ஸ்ரீலங்கா கூலிப்படையின் வேடிக்கையான கேள்விக் கணைகள்

யாழ், வடமாகுச்சிப்பகுதியில் கடந்தவாரம்வீடுவீடாக விடுதலைப் போராளிகளைத் தேடி தீவிர சோதனையை மேற்கொண்ட கூலிப்படையினர், அங்குவேடிக்கையான கேள்விகளை கேட்டுள்ளனர்.

வீடுஒன்றில்சோதனை நடத்திய போது ஒரு 'குடுகுடு' பாட்டியிடம் சென்று, "ஆச்சி நீங்களும் சாகிறது நாங்களும் சாகிறது, கவர்மென்ட்அங்கே(கொழும்பில்) புலி இந்தியாவிலே" என்று கூறினர்களாம்.

இன்னுமொரு வீட்டில் சோதனை நடத்தியபோது ஒரு வாலிபர் தனது அடையாள அட்டையை இராணுவத்தினரிடம் கேட்டாராம். அதற்கு இராணுவ அதிகாரி சகராணுவத்தினரிடம் "எங்கே இவரது அடையாள அட்டை" என்று கேட்ட போது அவர்கள் கையை விரித்தனராம். பின்னர் தனது பொக்கேற்றில் அட்டை இருப்பதைக்கண்ட வாலிபர் "மன்னிக்கவும் இங்கே இருக்கிறது" என்றாராம். அதற்கு இராணுவத்தினர், அவரது தலையைத் தடவி, உங்களுக்கும் அப்செட், எங்களுக்கும் அப்செட் புலிவந்தால் எல்லாமே அப்செட் என்றனராம்.

மேலும் ஒரு வீட்டில் சோதனை நடாத்தியபோது ஒரு சிறுமியை தூக்கி ஹெலிகாப்டரைக் காட்டிவிட்டு, அண்ணை எங்கே? மாமா எங்கே? என்று நைசாக கேள்வி கேட்டனராம்; ஆனால் அந்தக் குழந்தை எதுவும் சொல்லவில்லை.

## ராணுவத்திடம் ஐயர் கொடுத்த "ஸ்பீக்கர்"

வலிகாமம் வடக்குப் பகுதியிலுள்ள குக்கிராமங்களை கவச வாகனங்கள் சகிதம் முற்றுகையிட்ட பாதுகாப்புப் படையினர் குறிப்பாக அப்பகுதிஆலயங்களில் தீவிரவாத இளைஞர்களை சல்லடை போட்டுத் தேடினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தோட்டங்களில் கூலி வேலை செய்யும், தோட்டம் கொத்தும் தொழிலாளிகள் இவர்களைக் கண்டு அச்சமுற்று ஓட்டம் பிடிக்க முற்பட்டபோது 'பயம் வேண்டாம்' என்று சொன்னவர்கள் சைவாலயப் பூசகர்களை ஒரு கலக்குக் கலக்கி விட்டார்களாம்.

ஆலயத்தில் நின்ற குருக்கள் ஒருவரிடம் 'ரெலா' வைத் தெரியுமா? என்று அவர்கள் இயந்திரத் துப்பாக்கிகளை நீட்டிப் பிடித்தபடி அதட்டிக்கேட்டதும் சப்த நாடியும் ஒடுங்கிப் போய்விட்ட நிலையில் ஓம் ஓம் இருக்கிறது என்று நாக்குழறியபடி ஆலத்துக்குள் ஓடிச் சென்று ஒலிபெருக்கியை எடுத்து வந்து அவர்களிடம் கொடுத்தாராம் ஐயர்.

# கேள்வி பதில்

கேள்வி: தமிழீழப் போராட்டத்தில் தனி நபர்கள் வளர்க்கப்படுவது தவறு என சிலர் கூறுகின்றார்களே! இது பற்றி உங்கள் கருத்தென்ன?

—H. M. சலீம்.
சாய்ந்தமருது

பதில்: தமிழீழப் போராட்டத்தில் மட்டுமல்ல எந்த ஒரு விடுதலைப் போராட்டத்திலும் மக்கள் ஆதரவில்லாத தனியொரு மனிதனுக்கு அளவுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்து அவனை ஒரு கதாநாயகனாக (Hero) உயர்த்திக் காட்டுவது தவறுதான். ஆனால் ஒரு நாட்டினது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்ற உண்மையான—மக்கள் இயக்கத்தின் தலைவர் என்ற வகையில்—சிலருக்கு முக்கியத்துவம் கொடுத்தே ஆகவேண்டிய வரலாற்றுக் கட்டாயமும் உண்டு சோவியத் நாட்டின் போல்ஸ்வீக் கட்சி லெனினுக்கு முக்கியத்துவம் கொடுத்தே மாபெரும் அக்டோபர் புரட்சியை நடத்தியது. அதே போல் கியூபாவிலும் பிடல் கஸ்ற்ரோவிற்கு முக்கியத்துவம் கொடுத்தே அந்த நாடு விடுதலை பெற்றது. மக்கள் சீனவிலை மாவோ-சே-துங்-கின தலைமைக்கு முக்கியத்துவம் கொடுத்தே மாபெரும் சீனப் புரட்சி வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது. எவ்வாறாயினும் ஒரு விடுதலை இயக்கத்தின் தலைவருக்குக் கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவம் அவரை ஒருமக்கள் தலைவனாகவும் மனிதநேயம் மிக்கவராகவும் மாற்றுமளவிற்கே இருக்க வேண்டும். மாறாக சர்வாதிகாரிக்குரிய தன்மைகளை வளர்த்து விடுமளவிற்கு ஒரு இயக்கத்தின் தலைவர் வளர்த்துவிடப்படுவாராக இருந்தால், அது அவரைத் தலைவராக்கிய இயக்கத்திற்கும் மக்களுக்கும் என்றைக்குமே கேடு விளைவிப்பதாகவே அதுஅமையும்.

கேள்வி: இந்திராகாந்தி சுடப்பட்டது பற்றி உங்கள்கருத்து என்ன?

— பாலசுந்தரம்,
முல்லைத்தீவு

பதில்: "ஈடு செய்ய முடியாத இழப்பு" என்ற வார்த்தைக்கே அப்பாற்பட்ட இழப்பு. இந்திராவைப் படுகொலை செய்வதற்குத் திட்டமிட்டவர்கள், அந்த கைங்கரியத்தை நிறைவேற்றியதின் மூலம் தங்களது இனத்திற்கும் மதத்திற்கும் மிகப் பெரிய சேவை செய்துவிட்டோம் என்று எண்ணியிருந்தால், அதுவே அவர்கள் தங்கள் மதத்திற்கும் இனத்திற்கும் செய்த மிகப் பெரிய கேடும் அவமானமுமாகும். பொது வாழ்க்கையில் ஈடுபட்ட எந்த ஒரு தனி மனிதனையும் படுகொலை செய்வதன்மூலம், எந்த ஒரு இனத்தினதோ, நாட்டினதோ, வர்க்கத்தினதோ எதிர்பார்ப்புகள் நிறைவேறிவிடப் போவதுமில்லை, பிரச்சினைகள் தீர்ந்துவிடப் போவதுமில்லை.

கேள்வி: தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் "தமிழீழத்தின் குரல்" கேட்க விரும்புகின்றேன். அதற்கான அலைவரிசைகளையும், ஒலிபரப்பு நாட்களையும் குறிப்பிட முடியுமா?

— சாந்தினி,
திருக்கோயில்

பதில்: S. W. 49 மீட்டர் 6300—6500 கிலோ சைக்கில், S. W. 49 மீட்டர் 6800—6900 கிலோ சைக்கில், S. W. 41 மீட்டர் 7080—7120 கிலோ சைக்கில் ஆகிய அலைவரிசைகளில், ஒவ்வொரு சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் காலை 7-00 மணியிலிருந்து 8-00 மணி வரையிலும் மாலை 4-00 மணியிலிருந்து -00 மணி வரையிலும் நீங்கள் "தமிழீழத்தின் குரல்" வானொலியைக் கேட்கலாம்.

கேள்வி: தமிழீழப் போராட்டத்தில் இராணுவ வீரர்களையும் போலிசாரையும் கொலை செய்வதன் மூலம் சிறீலங்கா அரசை பணிய வைக்கலாம் என்று எண்ணுகிறீர்களா?

பதில்: எந்த ஒரு விடுதலை போராட்டத்திலும் எதிரியின் கூலிப் படைகளை அழிப்பதன்மூலம் எதிரிக்குப் பெரிய இழப்பு எதையும் ஏற்படுத்திவிடமுடியாது. இறந்துபோன கூலிப்படைகளுக்கு பதிலாக-எதிரி புதிய கூலிப்படைகளைத் தயார் செய்துவிடுவான். இறந்துபோன கூலிப்படை வீரர்களின் உறவினர்களும் அதற்கு மகத்தான ஆதரவினை வழங்கவே செய்வார்கள். உண்மையில் கூலிப் படையின் இழப்பு எதிரிக்கு ஒருபெரிய இழப்பல்ல. பொதுவாக எதிரியின் பலவீனம் எது என்பதையறிந்து அதற்குரிய சாதனங்களை நிர்மூலமாக்கி அழிப்பதன் மூலந்தான் எதிரிக்குப் பெரியதொரு இழப்பையும் அச்சத்தையும் ஏற்படுத்த முடியும்.

கேள்வி: மக்களுக்கு ஏற்படும் இழப்புக்கள் தான் தமிழீழப் போராட்டத்தின் வளர்ச்சி என்று சிலர் கூறுகிறார்களே! இதைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: நேற்று முன்தினம் நாங்கள் ஒரு படை வீரனைக் கொன்றோம். அதற்குப் பழிவாங்கும் விதத்தில் ஐந்து அப்பாவிப் பொது மக்களைச் சுட்டுக் கொன்றார்கள். நேற்றைய தினம் இரண்டு இராணுவ வீரர்களைக் கொன்றோம். அவர்கள் பத்து அப்பாவி மக்களைச் சுட்டுக் கொன்றார்கள். இன்றைய தினம் பத்து இராணுவ வீரர்களைச் சுட்டுக் கொன்றோம். அவர்கள் நூறு அப்பாவி மக்களைச் சுட்டுக் கொன்று பழி தீர்த்துக் கொண்டார்கள். நாளையதினம் நூறு இராணுவ வீரர்களைச் சுட்டுக் கொல்வோம். அவர்களும் பல ஆயிரம் அப்பாவி மக்களைச் சுட்டுக் கொல்வார்கள். இப்படியெல்லாம் நடப்பது தமிழீழப் போராட்டத்தின் வளர்ச்சியாயிருக்கமுடியாது. இந்த நிலை தொடர்ந்தால் சுடுவதற்கு நாங்கள் இருப்போம். எங்களிடம் சூடு வாங்குவதற்கு எதிரி இருப்பான். ஆனால் எதிரியால் பழிவாங்கப் படுவதற்கு எங்கள் மக்கள் இருக்கமாட்டார்கள். அதன் பின் எதற்கு? தமிழீழமும் தனி நாடும்!

முகவரி:
கேள்வி-பதில்
தமிழன் குரல்
11, தேசிகர் விதி
வடபழனி
சென்னை-26

# தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். சிகிச்சைக்காக அமெரிக்கா கொண்டு செல்லப்பட்டார்



தமிழகமுதல்வர் M. G. R. கடந்த மாதம் 5-ம் திகதி முதல் சுகயீனம் காரணமாக சென்னை அப்பலோ மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டது தெரிந்ததே! தற்போது விசேட சிகிச்சைக்காக அமெரிக்கா கொண்டு செல்லப்பட்ட தமிழக முதல்வர் அவர்கள் பூரண நலத்தோடு திரும்பி வந்து தமிழக மக்களுக்கும், தமிழீழ மக்களுக்கும் தனதுஅளப்பரிய சேவையினை செய்ய வேண்டும் என நாம் மிக ஆவலோடு எதிர் பார்க்கின்றோம்.

முதல்வர் பூரண நலத்தோடு தாய் நாடு திரும்ப வேண்டும் என தமிழன் குரல் தனது வாசகர்கள் சார்பில் வாழ்த்துகிறது.

# தமிழீழத்தின் செய்திகள் சிலவரிகள்

**11—11—84**

ரூபவாகினி டிவி (தொலைக் காட்சி) கோபுரத்தை தமிழ்த் தீவிரவாதிகள் தகர்க்க முயற்சித்துள்ளனர். இதில் இராணுவ வீரர் இறந்ததாகவும், இன்னும் பலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மாதகல் பகுதியில் தினசரி இரவு 7-00 மணியிலிருந்து ஒன்பது மணிவரை கடற் பகுதியில் பீரங்கிக் குண்டுகள் முழங்குவதால் மக்கள் பீதியுற்று குடி பெயர்ந்து வயல் வெளிகளில் வாழ்ந்து வருகின்றனர்.

**31—10—84**

உரும்பிராயில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இரண்டு இளைஞர்கள் பலியாகியுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இஸ்லாமிய மாணவர் இராணுவத்தினரால் ஆயுத முனையில் மிரட்டப்பட்டுள்ளனர்.

வசாவிளானில் இராணுவத்தினரால் விடுதி மாணவர்கள் துன்புறுத்தப் பட்டுள்ளனர்.

**2—11—84**

புங்கங்குளம் அருகில் புகையிரதத்திலிருந்தவாறே இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இச் சம்பவத்தில் சங்கானையைச் சேர்ந்த சாந்தன் என்பவர் பலியாகியுள்ளார்.

பலாலி — பருத்தித்துறை வீதியில் வளளாய் என்ற இடத்தில் 2-30 மணியளவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பல வீடுகள் சேதமடைந்துள்ளன. சில வீடுகள் தீக்கிரையாகின. சிலர் பலியாகியுள்ளனர்.

அச்சு வேலியில் சிருடையில் வந்து அட்டகாசம் புரிந்து பல வீடுகளைத் தீக்கிரையாக்கியுள்ளனர்.

**3—11—84**

உரும்பிராய்க் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஆயுதப் படையினர் பலத்த சேதம் அடைந்துள்ளனர். "வளளாயில்" ஐநூறு பேர் வீடு இழந்துள்ளனர். ஒருவர் தீயில் கருகி இறந்திருக்கிறார்.

**4—11—84**

கிளி நொச்சி பாதுகாப்பு பிரதேசமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. வளளாயில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு துவிச்சக்கர வண்டியில் வந்த இளைஞர் பலியாகியுள்ளார்.

**5—11—84**

'இடைக்காடு' என்னுமிடத்தில் முப்பது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. திரு. ஆ. வேலுப்பிள்ளை ஆசிரியர் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டார்.

**9—11—84**

யாழ் நகரில் இராணுவத்தினர் எவ்வித காரணமும் இன்றி 8 பேரை சுட்டுக் கொன்றுள்ளனர். 35பேரைக் காயப்படுத்தியுள்ளனர்.

**15—11—84**

பல்கலைக்கழக மாணவிகள் மீதும், பேராசிரியைகள்மீதும் இராணுவத்தினர் ட்ரக்குகளில் இருந்து அசிட்வீசி காயப்படுத்தினர்.

**18—11—84**

அம்பாறையில் இலங்கை வங்கிக் கிளை அதிகாரி பணம் எடுத்துவரச் சென்றபோது அக்கரைப்பற்று என்னும் இடத்தில் வைத்து தீவிரவாதிகள் வழி மறித்துவங்கிப் பாதுகாவல் அதிகாரியின் இரட்டைக் குழல் துப்பாக்கியை பறித்துச் சென்றனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையம் கடந்த செவ்வாய்க் கிழமை பிற்பகலில் தமிழீழ விடுதலைப் போராளிகளால் குண்டுவீசித் தாக்கி முற்றாக நிர்மூலமாக்கப் பட்டுள்ளது. இத்தாக்குதல் சம்பவம் நடந்த சமயத்தில் இரண்டு மாடிகளைக் கொண்ட அந்த பொலிஸ் நிலையக் கட்டிடத்தில் 45 உயர் அதிகாரிகளும், அதே எண்ணிக்கை அளவிலான பொலிஸ் உத்தியோகஸ்தர்களும் தங்கியிருந்ததாக நம்பப்படுகிறது. இத்தாக்குதல் சம்பவத்தில் அவர்களில் 60 பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஸ்ரீலங்கா அரசு 27 பேர் மட்டும்தான் கொல்லப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளது.

**—14-11-84**

கொழும்பு — யாழ். தனியார் பஸ் ஒன்று மாவலை எனும் இடத்தில் சாரதி காடையர்களால் தாக்கப்பட்டு மினிபஸ் மின் கம்பத்தில் மோதியது. இதனால் 30 பேர் தமது உடமைகளை இழந்து வேறு ஒரு வாகனம் மூலம் யாழ் வந்து சேர்ந்தனர்.

யாழ் நவீன சந்தைக்கு முன்னால் இராணுவம் குண்டு வைத்து வெடித்தது. இதை பயங்கரவாதிகள் செய்தது என கூறி வீதிகளில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

## மன்னர் பா. உ. வீட்டில் வாலிபர்கள் கைவரிசை

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சூசைதாசனின் வீட்டினுள் புகுந்த மூன்று வாலிபர்கள் அவரது கைத் துப்பாக்கியை எடுத்துச் சென்றுள்ளனர்.



ஹாட்லி கல்லூரி நூலகம் எரிக்கப்பட்டதை கண்டித்தும், இராணுவத்தை வெளியேற்றக் கோரியும் மாணவர்களால் நடத்தப்பட்ட உண்ணாவிரதம்,

# உலகச் செய்திகள்

## போலந்து புகட்டும் பாடம்

சகலவிதமான சுரண்டல் வடிவங்களையும் சமாதியாக்கி, சொர்க்கத்தை சோவியத் பூமியில் அக்டோபர் புரட்சி ஏந்தி வந்த போது முதலாளித்துவத்தின் வால் நுனியில் தீப்பிடித்தது. புது வெள்ளத்தால் சீறிப்பாயும் கங்கைக்குப் பக்கத்தில் காய்ந்து கிடக்கும் குளத்திலும், கிணற்றிலும், தரை மட்டத்திற்குத் தண்ணீர் உயரும் என்பதைப் போல, பொதுமைப் புரட்சியால் புதியதொரு தேசம் பக்கத்திலேயே பிறந்தது. ஆம். போலந்து தேசம் விடுதலை பெற்றது.

சோவியத் யூனியனுக்கும் ஜெர்மனிக்கும் இடையில் தோன்றிய இந்த நாடு சுதந்திரமாய் இயங்கியது உண்மையே என்றாலும் சுரண்டல் காடாகவே விளங்கியது. பூமியின் பரப்புத்தான் நாடு என்ற பெயரில் மக்களுக்குப் பொதுவானதே தவிர பொருளாதார ஆணிவேர்கள் அனைத்தும் மூலதன மண்ணிலேயே கிடந்தன. எனவே அதன் அரச அதிகாரங்களும் ஆட்சி அமைப்புகளும் முதலாளிகளின் கையிலேயே சிக்கிக்கொண்டன.

சிறந்த தொழில் துறை நாடாக போலந்தை ஆக்க வல்லரசுகள் விரும்பவில்லை. மூலதனம் போட்ட அயல் நாட்டு முதலைகளோ போலந்தைத் தம் பிடியிலேயே வைக்கப் பெரும்பாடு பட்டன, நாட்டை நவீனமயப் படுத்தினால் நாசம் நமக்குத்தான் என்று நினைத்து போலந்தை நரகமாக்கத் துணிந்தன.

நெருக்கடிகள் ஏழை எளிய மக்களின் குரல் வளையை நெரித்தன, வாழ்க்கைச் சுமைகள் வாய்பேசாப் புழுக்களின் முதுகுகளை கேள்விக் குறிகளாய் வளைத்தன. பட்டினிப் பட்டாளம் பெருகியது. ஏமாற்றுக்காரர்களின் அரசியலில் ஏழைகள் ஏமாந்தார்கள். வாய்ச்சொல் வீரர்களின் வாக்குறுதிகளால் வல்லரசுகளின் வலையில் வீழ்ந்தார்கள். பாஸிஸ சர்வாதிகாரி ''பில்சுடிஸ்கி'' என்பவனின் ஆட்சிக்குள் சிக்கித் தவித்தார்கள். 1926 ம் ஆண்டில் ஏற்பட்ட இவனது அரசு, ஆரம்பத்தில்மக்களுக்குஆசை காட்டியது. நெஞ்சுருகுவது போல் நடித்து நீலிக்கண்ணீர் வடித்தது. வாழ்க்கையின் சகல துயரங்களுக்கும் விடிவு தோன்றும் என்று புளுகித் தள்ளியது. ஆனால் நடைமுறையில் சுரண்டலுக்குச் சுரங்கப் பாதை அமைத்தது. உழைப்பாளிகளைக் கசக்கிப் பிழிந்தது. ஏகாதிபத்தியத்தின் எடுபிடியாய் மாறியது.

போலந்து மக்கள் இனியும் ஏமாரத் தயாராக இல்லை. அன்னிய ஏகாதிபத்தியத்தின் கீழ் 100 ஆண்டுகளுக்கு மேல் நசுங்கி ஆகி விட்டது. உள்நாட்டு ''பில்சுடிஸ்கியின்'' பேயாட்சியில் மேலும் பல ஆண்டுகள் கொடுமைகளை அனுபவித்தாகி விட்டது. இத்தனை கொடுமைக்கும் அடிப்படைக் காரணம் முதலாளித்துவ சமூக அமைப்பும் அதன் மூலதன அடித்தளமுமே என்பது வெட்ட வெளிச்சமாகி விட்டது. எனவே மார்க்ஸீயத்தால் கவரப்பட்டவர்களும் இடதுசாரி ஜனநாயக சக்திகளும், தொழிலாள வர்க்கமும்புதியதோர் உலகம் செய்யப் புறப்பட்டனர். ஆம் போலந்திலே மற்றுமோர் சுதந்திரப்போர் ஆரம்பமானது. மக்கள் கிளர்ந்தெழுந்தார்கள்; புரட்சி இயக்கம் உருவாக்கினார்கள். இதனைக் கண்டு சுரண்டிக் கொழுத்தோர் சீறினார்கள். மூலதன வெறியர்கள் மதம் பிடித்து ஆடினார்கள். உள்நாட்டு யுத்தத்தை வேண்டுமென்றே உருவாக்கினார்கள். திட்டங்கள் தவிடு பொடியாகவே தொழிலதிபர்கள் ஓட்டம் பிடித்தார்கள். அந்நிய நாடுகளில் சரணடைந்தனர்.

தொழிலாள வர்க்கத்தின் தியாகம் நிறைந்த வீரதீரச் செயல்களால் எண்ணற்ற தலைமுறைகளின் உன்னதமான வாழ்க்கைக்கு உத்தரவாதமளிக்கக் கூடிய வகையிலே போலந்து பொதுவுடமைப் பூங்காவாக மாறியது. வரலாற்று நியதியும் அதுதான்.

எனவேதான் இந்த அனுபவங்களின் அடிப்படையில் எமது மக்களை மீண்டும்-மீண்டும் கேட்கின்றோம், நாம் பெறுகின்ற தமிழீழம்வெறும் சுதந்திரக் கொடியைப்பறக்க விடுவதாக மட்டும் இருந்து விடக்கூடாது. அது சோஸலிச ஜனநாயக சமதர்மக் குடியரசாக விளங்க வேண்டும். அப்போதுதான் நாம் உண்மையான விடுதலையைப் பெற்றவர்களாவோம்.

இல்லை என்றால் எவ்வளவோ தியாகங்களுக்கு மத்தியில்எமது தமிழீழத்தை மீட்டு — அந்தத் தமிழீழத்தை உள்நாட்டிலே ஆதிக்க வாதிகளிடம் ஒப்படைத்து-மீண்டும் நாம் கொடுமைப் படவேண்டி ஏற்படும். அவர்களின்கொடுமை தாங்க முடியாமல் கொதித்தெழுந்து, மீண்டும் ஓர் போராட்டத்தை நடத்த வேண்டி ஏற்படும். மேலும் எமது உயிர்களும் உடைமைகளும் நாசமாகும். எனவே நாம் ''ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள் போல்'' தமிழீழத்தை மீட்கின்ற அதே நேரம்-அதனை ஒரு சோஷலிஸப் பூமியாகவும் ஆக்க வேண்டும். இதுதான் நமக்குப் போலந்து புகட்டுகின்ற பாடமாகும்.

## றேனல்ட் ரீகன் மீண்டும்ஜனாதிபதி

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ரீகன் வெற்றி பெற்றுள்ளார், அவர் வெற்றி பெற்றதன் பின்பு தமது தொகுதியான கலிபோர்னியாவில் இருந்து, அவர் ஆற்றிய உரையில் தமது வெற்றி தாம் கடைபிடித்து வரும் கொள்கைகளுக்கு மக்கள் அளித்துள்ள தெளிவான அங்கீகாரம் எனக் கூறினார். தமது அடுத்த பதவிக்காலத்தின்போது இதே கொள்கைகளைத்தான் திடசங்கற்பத்துடன் தொடர்வேன் என்று உறுதியளித்துள்ளார்.

ஆம் ரீகனுடைய கொள்கைகள் லத்தீன் அமெரிகக நாடுகளினதும், கரிபியன் நாடுகளினதும் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாக அமைந்திருந்தது அதன் பொருள் தென்கிழக்காசியப் பிராந்தியத்தில் பாசிச பாசிச ஆட்சிகளுக்கு ஆதரவு தருவதும் வெகுஜன மக்கள் இயக்கங்களை அடக்குவதற்கு சர்வாதிகாரிகளுக்கு உதவுவதுமான, ஒரு கொள்கையை முழு மூச்சுடன் பின்பற்றுவதுமாகும். மேலும் பாகிஸ்தான், பங்களாதேஸ் சிறீலங்கா ஆகிய நாடுகளினூடாக தெற்காசிய பிராந்தியத்தில் அமெரிக்க செல்வாக்கை விஸ்தரிந்து இந்திய அரசை நிலைகுலையச் செய்வதற்கும், அந்நாட்டை அமெரிக்காவின் ஒரு கைப் பொம்மையாக்குவதற்கும், வெளிப்படையானதும், மறைமுகமானதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் பொருளாகும்.

இந்தியாவை ஒரு அமெரிக்க நாடாக குறிப்பிட்டுள்ளதுடன் அங்கு பிரிவினைகளை ஊக்குவிப்பதற்கு பலாத்காரத்தையும் பயன்படுத்தலாம் என ''கேட்பற்றித் திட்டம்'' கூறுகின்றது.



மத்திய கிழக்கில் பாலஸ்தீனிய மக்களுக்கெதிராகவும் அவர்களின் ஒரே பிரதிநிதியான PLO-க்கு எதிராகவும் தாக்குதல்களில் அமெரிக்கா தீவிரமாக ஈடுபட்டுள்ளது. ரீகனின் ஆட்சியின்கீழ் அமெரிக்கா அரேபிய மக்களுக்கு எதிரான இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை இராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், ஆதரித்து வந்துள்ளது. ''சப்ராலிலும், சட்டிலாவிலும்'' இருந்த அகதிகள் முகாம்கள்மீது இஸ்ரேலியர்களினால் நடத்தப்பட்ட படுகொலைகளைக் கண்டிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளை ரீகன் நிர்வாகம் தனது விசேட ரத்து அதிகாரத்தினை உபயோகித்து ஐ. நா. சபையில் முறியடித்து இருக்கின்றது.

ஆப்பிரிக்காவைப் பொறுத்த வரையில் அமெரிக்காவின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சர்வதேச நிதி நிறுவனத்தின் மூலமும், உலக வங்கி மூலமும் உதவிகள் பெறுகின்ற நாடுகளையும் அக்கண்டத்திலுள்ள சோஸலிச அரசுகளின் முயற்சிகளையும் முறியடிப்பதே ரீகன் நிர்வாகத்தின் கொள்கையாக இருந்து வந்தது. மறுபுறத்தில் அமெரிக்கா உகண்டாவின் இடிஅமீனை ஒத்த சர்வாதிகாரிகளினதும், நரமாமிச வேட்கையாளர்களினதும் பாசிச ஆட்சி பீடங்களை எப்போதும் ஆதரித்து வந்திருக்கின்றது. இன்றும் கூட ''மில்ரன் ஏபோட்'' இன் ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சிசெய்கின்ற அமீனின் கூலிப்பட்டாளத்துக்கு ரீகன் நிர்வாகம் நிதியுதவி செய்து வருகின்றது.

நமிபியாவை பொறுத்த வரையில் நமிபிய மக்களின் விடுதலைக் கிளர்ச்சியை அமெரிக்கா இடையறுது எதிர்த்து வந்ததுடன் தென் ஆபிரிக்க இனவெறி அரசுக்கு இராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஆதரவு தந்து வந்துள்ளது.

தென் ஆப்பிரிக்காவைப் பொறுத்த வரையில் ரீகன் நிர்வாகத்தின் கீழ் அமெரிக்கா வெள்ளை ஆதிக்க ஆட்சியின் இனவாதக்கொள்கையையும், பெருமபான்மையான கறுப்பினத்தவர்களை ஒடுக்கி ஆளும் கொள்கையையும், ஆதரித்து வந்திருக்கிறது என்பதையும் இவ் கறுப்பின மக்கள் அடிமைகளின் நிலையில் ஆகாரமின்றி பசிப் பிணியுடன் வாழ்கிறார்கள் என்பதையும் சொல்லத் தேவையில்லை. ஐரோப்பாவைப் பொறுத்த வரையிலே ரீகனின் கொள்கையானது இங்கிலாந்து, மேற்கு ஜெர்மனி போன்ற மேற்கத்திய நாடுகளில் அமெரிக்க அணுவாயுத ஏவுகணைகளை மென் மேலும் குறிப்பாக ''சோவியத்'' நாட்டுடனும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும் யுத்த பீதியை பெருக்குவதாகவும் அமைந்துள்ளது.

அவா ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் அவரது மாபெரும் வெற்றி என்ன வென்றால் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு அணுவாயுத. யுத்த அபாயத்தை பெருக்கியதும், ஏவுகணையின் உற்பத்தியை கட்டுப்படுத்துவதற்கான சர்வதேச உடன்படிக்கைகளை சீர்குலைத்ததுமாகும். இதையேதான் மீண்டும் ரீகன் ஜனாதிபதியாக வந்ததும் தனது கொள்கைகளுக்கு அமெரிக்க மக்கள் தெளிவான அங்கீகாரம் வழங்கியுள்ளார்களெனக் கூறியுள்ளார்.

## தென் கொரியா

அண்மையில் இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்பாட்டங்களின் போது 2000 பல்கலைக்கழக மாணவர்கள் தென் கொரிய ஜனாதிபதி ''சுன் டூ வான்'' இன் கொடும்பாவியை சுட்டெரித்தனர். சியோ நகரில் உள்ள ''ஜொான்சீ'' பல்கலைக்கழகத்தையும் வேறு பல்கலைக் கழகங்களையும் சாந்த மாணவர்கள் திரண்டு இருந்த இவ் ஆர்ப்பாட்டத்தில் பல்கலைக்கழகங்களின் சுயாட்சி, தொழிலாளர் உரிமைகள், பத்திரிகை சுதந்திரம் போன்ற உரிமைக்கான கலோகங்கள் எழுப்பப் பட்டன. சனிக்கிழமை தொடக்கம் 500 மாணவர்கள் உண்ணா நோன்பு மேற்கொண்டு வருகின்றனர். இம்முயற்சி அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை தொடர்ந்து ஏற்படுவதற்கு வாய்ப்பாகிறது.

## நிக்கரக்குவா

அமெரிக்க ஆதரவு கலகக்காரர்களினால் மேற் கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலில் நிக்கரக்குவா செய்தித் தொடர்பு அமைச்சர் ''என்றிக் சிமித்'' கொல்லப்பட்டார். மேலும் அவர்களினால் மேற் கொள்ளப்பட்ட தாக்குதலில் பல சாதாரண மக்கள் கொல்லப்பட்டனர். அண்மையில் கிழக்கு செலலயா மாகாணத்தில் இடம் பெற்ற தாக்குதலில் அரசு தரப்பில் 35 வயது நிரம்பிய என்றிக் சிமித் மாத்திரமே கொல்லப்பட்டார். 75 கலகக்காரர்கள் கொல்லப்பட்டதாகவும், 3 பேர் காயப்பட்டதாகவும் அரசு தரப்பு செய்திகள் கூறுகின்றன.

கடந்த மூன்றாண்டுகளாக அரசதரப்பினருக்கும், கலகக்காரர்களுக்கும் இடையே இடம் பெற்ற கலகங்களில் 8,000 நிக்கரக்குவா மக்கள் கொல்லப்பட்டதாக சண்டினஸ்ரா தலைவர் ஒரிகா கூறியுள்ளார்.

நிக்கரக்குவா ஜனாதிபதிமற்றும் பாராளுமன்ற தேர்தல்களின் முடிவுகள் அன்மையில் வெளிவந்த விபரப்படி வாக்களித்த தொகையினரின் 2/3 பகுதியினர் சாண்டிஸ்டுக்களை ஆதரித்துள்ளதாகதெளிவாக தெரியவருகிறது. வலதுசாரிகள் தேர்தலைப் பகிஷ்கரியுங்கள் என்ற கோரிக்கையை புறக்கணித்து மக்கள் பெரும் திரளாக வாக்களிப்பில் கலந்து கொண்டனர். ஒருபோலீஸ் அதிகாரி உட்பட தேர்தல் குழு உறுப்பினர்கள் இருவரும் எதிர்ப்புரட்சியாளர்களினால் கொல்லப்பட்டுள்ளனா. அத்துடன் அமெரிக்க ஆதரவு பெற்ற கலகக்காரர்கள், ஒருவரைக் கடத்தியுள்ளனர். 11 வாக்குசாவடிகளில் வாக்களிப்பு இவர்களால் தடைப்படுத்தப் பட்டுள்ளது. கொண்டூரஸ் நாட்டில்இருந்துநிக்கரக்குவாவிற்குள் புகுந்த 400 கூலிப் படையினரை நிக்கரக்குவா படையினர் அழித்து விட்டனர். சோமசிஸ்ரா ஜனநாயக முன்னணி தாம் தேர்தல்தினத்தன்று அமைதி கடைப்பிடிக்க உள்ளதாக கொடுத்த வாக்குறுதியை கைவிட்ட பின்பு இத்தகைய சதிச்செயலில் ஈடுபட்டனர்.

தேர்தல் முடிவை குறிப்பிடும் வகையில் தேசியடானியல் ஓர்க்கேகா. கோர்ஜியோ ரேமிசெஸ் ஆகிய இருவரும் இத்தேர்தல்களை அடுத்து நிக்கரக்குவாவில் இடம் பெறும் ஜனாதிபதி முறையும், பாராளுமனற அமைப்பும் கொண்ட ஓர் அமைப்பு நிக்கரக்குவாவில் இடம் பெறும் என்று வர்ணித்தனர். மேலும் அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்க இருப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். சர்வதேச மட்டத்தில்மத்திய அமெரிக்க நெருக்கடியை தளர்த்துவதற்கான ''கொண்டடோரா'' குழுவினரின் முயற்சிகளை தாம் ஆதரிக்கஉள்ளதாகவும்அவர் குறிப்பிட்டார்.

## பிரித்தானியா

பிரித்தானிய சுரங்கத் தொழிலாளர்களின் 35 வார கால நீண்ட போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு அரசாங்கம் தவறிவிட்டது என்ற குற்றச் சாட்டை இங்கிலாந்து திருச்சபை சுமத்தி உள்ளது. தொழிலாளரின்கோரிக்கையை அகம்பாவத்துடனும், வெறுப்புடனும் நோக்கிவரும் தாட்சரின் மனப்பான்மை தொழிற் புரட்சியின் பின்பு உதயமான புதிய முதலாளிகளின் மனப்பாங்குடன் ஒத்துக் காணப்படுகிறது. எப்படியாவது சுரங்கத் தொழிலாளர்களை அடிபணிய வைக்க வேண்டும் என்று விரும்பும் தாட்சர் சுரங்கத் தொழிலாளர்களின் வங்கிக் கணக்கை அபகரிப்பதை நோக்கமாக முன்வைத்துள்ளார். இதன் மூலம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் குடும்பங்கள் பெற்றுவரும் ஊதியத்தை தடுத்து விடலாம் என்பது தாட்சரின் முடிவான அபிப்பிராயமாகும்.

பிரித்தானிய சுரங்கத் தொழிலாளர்களின் துயர் துடைக்கும் வகையில் சோவியத் தொழிலாளர்கள் நிதி திரட்டி வருகின்றனர்.

## தென் ஆபிரிக்கா

''ரான்ஸ் வோலில்'' இடம் பெற்ற வேலை நிறுத்தத்தை அடுத்து 10 தென்ஆபிரிக்கா சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். தென் ஆபிரிக்காவில் இடம் பெறும் நிற வேற்றுமைக்கெதிராக உயிர்நீத்தவர்களின் எண்ணிக்கை இத்துடன் கடந்த பெப்ரவரி தொடக்கம் 142ஆக உயர்ந்துள்ளது. இந்த வேலை நிறுத்தம் அரசியல் உரிமைகளை வலியுறுத்தி கறுப்பு இனமக்களின் தொழிற்சங்கங்களால் நடத்தப்படுகிறது.

**தொடர்புகளுக்கு :**

ஆசிரியர்
''தமிழன் குரல்''
11, தேசிகர் வீதி,
வடபழனி,
சென்னை-26.

# பிரித்தானிய நாட்டில் தலைவிரித்தாடும் பயங்கர அராஜகம்!

அரசாங்கத்தின் முக்கிய பிரமுகர்களை கொலை செய்வதற்கான ஒரு முயற்சியில் ஒரு விருந்தினர் விடுதி வெடிக் குண்டுகளால் தகர்க்கப்பட்டது.

ஒரு வெள்ளையர்களின் வெறிக் கூட்டத்தினுல் 14 வயது ஆசியச் சிறுவன் ஒருவன் மயக்கமுறும்படி தாக்கப்பட்டு பின்னர் கத்தியினுல் அவனது முதுகு கீறிக் கிழிக்கப்பட்டது.

ஒரு தாயானவள் தனது 3 வயதுப் பெண் குழந்தையின் தலையைப் பிடித்துக் கொண்டிருக்க அவளது காதலன் அக்குழந்தையின் பற்களைப் பிடுங்கி எடுக்கின்றுன்.

மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஒருவர்கொடூரமாக நசுக்கிக் கொலைப்பட்டார்.

இவை கலவரத்துக்குள்ளான பல்வேறு நாடுகளில் பொலிஸ் பதிவேடுகளில் இருந்து பெறப்பட்ட பயங்கர நிகழ்வுகள் அல்ல. இவை சட்டத்தையும். நாகரிகத்தையும் பிரதிநிதித்துவப் படுத்துவதாக பாசாங்கு செய்கின்ற பிரித்தானியாவில் இவ்வாண்டு நடைபெற்ற நிகழ்வுகளே ஆகும்.

மிகக் கொடுமையான உலகத்தில் பிரிட்டன் இன்றும் கூட ஒரு அமைதியான நாடாகவே தோற்றமளிக்கிறது. பிரிட்டனில் பயங்கரவாதமும், குற்றச் செயல்களும் வேகமாகப் பெருகிக் கொண்டு வருகின்றன. நாளாந்த பத்திரிகை, தொலைக்காட்சிகளில் இனவாத அடிப்படையிலான தாக்குதல்கள், கொடூரமான வன்முறைகள் பொலிஸாருக்கும் சுரங்க வேலை நிறுத்தத் தொழிலாளர்களுக்குமிடையில் ஒரு தொடர்ச்சியான யுத்தமோ என்று சொல்லும்படியான சந்தேகம் பற்றிக் கூறிக் கொண்டு இருக்கின்றன. பிரித்தானியாவில் எல்லா விதமான வன்முறைக் குற்றங்களும் கடந்த சகாப்தத்திலும் இரட்டிப்பாகப்பெருகி விட்டன என்பதை புள்ளி விபரங்களே சுட்டிக்காட்டுகின்றன.

நால்வரின் கொலைக்குக் காரணமாக இருந்ததும், பிரதமர் தரிட்சர் கொலை செய்வதினின்று தப்பிப் பிழைத்ததுமான இருவாரத்துக்கு முந்திய ஐரிஸ் புரட்சி இராணுவம் (I. R. A) இன் வெடிக்குண்டு வீச்சு சம்பவம் வடக்கு அயர்லாந்து பற்றிய கலவரத்தில் ஒரேயொரு நிகழ்வு மட்டுமே, கடந்த வாரம் "அல்ஸ்டார்" இல் மேலும் இருவர் கொல்லப்பட்டனர். அதன்பிரகாரம் இவ்வாரம் இறந்தவர்களின் எண்ணிக்கை 51ஆக உயர்ந்துள்ளது. பிரித்தானிய இராணுவம், 1969-ம் ஆண்டு நுழைந்ததிலிருந்து 2396ஆக அதிகரித்துள்ளது, இவர்களுள் 1700 பேர் குடிமக்களாக அமைந்துள்ளனர். பிரிட்டிஸ் அரசாங்க மக்களை "கட்டுப்படுத்துவதற்கென" பயன்படுத்தப்படும் பிளாஸ்ரிக் வெடிகுண்டுகளினுல், வடக்கு அயர்லாந்தில் குழந்தைகள் உட்பட பெருந்தொகையான மக்கள்கொலை செய்யப்பட்டனர்.

தற்போது 8 மாதகாலமாக தொடர்ந்து நடந்து வரும் சுரங்கத் தொழிலாளர் வேலை நிறுத்தம் காரணமாகவே பெரும்பான்மையான வன்முறைச் சம்பவங்கள் நடைபெறுகின்றன, இந்தப் பிணக்கு சுரங்கத் தொழிலாளர்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் ஒரு கொடூரமான யுத்தமாக மாறியுள்ளது.

அரசாங்கம் வேலை நிறுத்தத்தை முறியடிக்க முதல் கட்டமாக பொலிஸாரைப் பயன்படுத்துகின்றது. அண்மைக் காலத்தில் மத்திய இங்கிலாந்திலும், வடக்கு இங்கிலாந்திலும் உள்ள "கிராமங்களிலும், நகரங்களிலும்" சுரங்கத் தொழிலாளர்கள் கூட்டங்களை குண்டாந்தடி தாங்கிய பொலிஸார் அடித்து நொருக்குகின்ற காட்சிகள் அற்ற ஒளிபரப்பு தொலைக்காட்சியிலே தோன்றியதில்லை. இருசுரங்கத்தொழிலாளர்கள் மறியல் போராட்டத்தில் கொல்லப்பட்டார்கள். ஒருவர் மார்பு நசுங்கி இறந்தார். மற்றவர் "ட்ரக் வண்டி" மறியலை ஊடுருவிச் சென்றபோது, உடல்மேல் ஏறிக் கொல்லப்பட்டார். ஏறக்குறைய 7,500 சுரங்கத் தொழிலாளர்கள் கைதியாகி உள்ளனர். அவர்களில் 3000 பேர் மருத்துவசிகிச்சை பெற்று வருகின்றனர்.

இன அடிப்படையில் வன்செயல்கள் பிரித்தானியாவில் இடம் பெற்றிருப்பது பல குடியிருப்புக்களின் நீங்காத குறையாக அமைந்துள்ளது. பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஸ் ஆகிய நாடுகளிலிருந்து இடம் பெயர்ந்து வந்துள்ளவர்கள் தான் தாக்குதலுக்கு உள்ளாயினர். இதற்கு ஒரே காரணம் அவர்கள் வெள்ளையர்கள் அல்ல என்பதுதான்.

அண்மையில் பிரித்தானிய பத்திரிகையில் வெளியான ஒரு நீதி விசாரணை பற்றிய செய்தியில், ஒரு சிறு வர்த்தகரையும், அவரது மனைவியையும் நிர்ப்பந்தத்துக்குள்ளாக்கி பணத்தைஅபகரித்து வர்த்தகரான "கரி" (HARRY) என்பவரின் காதை அறுத்து அவரது வாயில் திணித்தமையும், அவரது மனைவி "சிசிலிடிப் பிளை" அடித்து, அவரது பெண்மைக்கு அபகீர்த்தி ஏற்படும் நிகழ்வுகளும் இடம் பெற்றதாகத் தெரிவித்துள்ளது.

இவ்வாருன பிரித்தானிய ஆட்சி, இலங்கையில் இனப் படுகொலை அரசுக்கு உதவி செய்வதும் பிரித்தானியாவின்கூலிப்படையான S.A.S. யினர் தமிழரை அழித்தொழிக்கும் சிங்கள இராணுவத்திற்கு நவீன பயிற்சியளிப்பதும் வியக்கத் தக்கதல்ல.

## ஆயுத இறக்குமதியும் அரச பயங்கரவாதமும்

தமிழீழப்போராட்டத்தை நசுக்கி விடத்துடிக்கும் ஸ்ரீலங்கா அரசு பயங்கரமான ஆயுதங்களை, வெளிநாட்டு பிற்போக்கு கும்பல்களிடம் இருந்து கடன் பட்டு வாங்கி நாட்டில் குவிக்கின்றது. எத்தகைய ஆயுதக் குவிப்பின் மூலமும், தமிழீழ விடுதலைப் போராளிகளையும் மக்களையும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இருந்து நீக்கி விட முடியாது. இவ்வாயுதங்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக மட்டுமன்றி; ஸ்ரீலங்கா அரசின் சுரண்டல்களில் இருந்து விடுபட சிங்கள மக்கள் எதிராக கிளர்த்தெழும் போது, அவர்



களுக்கு எதிராகவும் பயன்படுத்தம்படும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

நவீன ஆயுதங்களை அரச கூலிப்படைகளுக்கு வழங்கி. தமிழீழப் பிரதேசங்களில் அரசு பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டமைக்கு அன்மைக் காலச் சம்பவங்களான, வல்வெட்டித்துறை எரிப்பு, மன்னர் எரிப்பு, பருத்தித்துறை ஹாட்சிக் கல்லூரி எரிப்பு, இளவாலை எரிப்பு என்பவைகள் உதாரணங்களாகும். இது போன்ற சம்பவங்கள், நாளை சிங்கள மக்களின் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படாது என்பதற்கு உத்தரவாதம் என்ன? இதனை சிங்கள மக்கள் சிந்திக்க வேண்டும். இனவாத போக்கில் இருந்து சிங்கள மக்கள் விடுபட்டால் தான் இதனை தெளிவாக புரிந்து கொள்ள முடியும். எந்த நாட்டோடு போர் தொடுக்க இந்த ஆயுதங்கள் வாங்கப்படுகின்றன? தமிழர்களை அழிக்கத்தானே! என்று சிங்கள மக்கள் திருப்திப் பட்டால் இந் நடவடிக்கையானது, தன் கையால்தானே கண்ணில் குத்தியது போன்று முடியும். இலட்சக்கணக்கான சிங்கள மக்களும் தமிழ் மக்களும் பட்டினியால் வாடும் போதும், ஆயிரக்கணக்கான யுவதிகளும், இளைஞர்களும் வேலையின்றி தவிக்கும்போது அப்பாவி மக்களின் வரிப் பணம் இப்படியான அழிவு வேலைகளுக்கு பயன்படுவதை இவர்கள் அனுமதிக்கின்றுர்களா?

இவ் வருட வரவு செலவுத் திட்டத்தில் கூட 2990 கோடி ரூபா துண்டு விழும் தொகையாக உள்ளது. இப்பணத்தை எப்படி இவர்கள் நிவர்த்தி செய்ய முடியும். அன்னிய நாட்டுக் கடன்கள் மூலமா? எந்த வெளி நாடும் இனிமேல் கடன் கொடுக்காது. காரணம் அந்த அளவிற்கு ஸ்ரீலங்கா அரசுக்கு, கடன்சுமை உண்டு. இதனை சிங்கள பாட்டாளி மக்கள் உணர வேண்டும்.

இரண்டு கோடி டாலர் அமெரிக்கப் பணத்துக்கு, அமெரிக்காவிடம் இருந்தும், சீனுவிடம் இருந்தும், 12 கப்பல்கள், 4 பீரங்கிக் கப்பல்கள், 4 வெடிக்குண்டு கப்பல்கள், 4 சக்தி மிகு ரோந்துப் படகுகள், என்பனவற்றை, தமிழர்களை அழிக்க ஸ்ரீலங்கா இனவாத அரசு வாங்குகின்றது. இப்பணம் யாருடையது? இவ்வாருன ஆயுதங்கள். நம்நாட்டுக்குத் தேவைதானு என்பதனை சிங்கள மக்கள் உணரவேண்டும்.

இந்த ஆண்டில் மட்டும், அமெரிக்கா, பிரிட்டன், தென் கொரியா, சிங்கப்பூர், பெல்ஜியம், அவுஸ்ரேலியா போன்ற பிற்போக்குவாத நாடுகளிடம்இருந்து, றைபிள்கள், இயந்திரத் துப்பாக்கிகள், ரிவால்வர்கள், குண்டுகள் மற்றும் படைத்துறைத் தளவாடங்களை 50 கோடி ரூபாய்க்கு வாங்க பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆயுதத்துக்கான பணச் செலவும் இவ்வாயுதக் குவிப்பும், இன்றைய கடன்படு நிலையிலும் வறுமை வாழ்விலும் தேவை தானு?

இன் நிலையில் யார் பயங்கரவாதிகள், என்பதனை எல்லா மக்களும் சிந்திக்கவேண்டும். இனத்தையும், நாட்டையும் காக்கப்போராடுபவன் பயங்கர வாதியா? மாருக. ஒரு இனத்தை அழித்துக் கட்ட திட்டமிட்டு இவ்வாறு ஆயுதங்களை இறக்குமதிசெய்பவர்கள் பயங்கரவாதிகளா?

இவ்வாயுதங்கள், தமிழ் மக்களையோ, போராளிகளையோ எதுவும் செய்து விடப்போவதில்லை. என்பதனை சிங்கள மக்கள் உணர வேண்டும். மாருக இவ்வாயுதங்கள், சிங்கள பாட்டாளி மக்களுக்கு எதிராக இவ்வரசினுல் பயன் படுத்தப்படும் என்பதனை சிங்கள மக்களுக்கு முன்எச்சரிக்கையாக சொல்லி வைக்க விரும்புகின்ருேம்.



### உலகிலேயே மிகச் சிறிய நாடு!

உலகில் மிகச் சிறிய நாடுகள் எல்லாம் தனியாட்சி நடத்துகின்றன. ஐரோப்பாவில் உள்ள டென்மார்க், இந்துமாக் கடலில் உள்ள செசயில்சு, வட அமெரிக்காவுக்கும் தென் அமெரிக்காவுக்கும் இடையே கரீபியன் கடலில் உள்ள கிட்சு-நெவிச் முதலான பல சிறிய நாடுகள் தனித்து இயங்குகின்றன.

ஆனல், சிறிய நாடுகளில் எல்லாம் மிகச் சிறிய நாடாக உள்ளது நவுரு (Nauru) என்பது ஆகும். தெற்குப் பசிபிக் மாக்கடலில் மிதக்கும் இந்தத் தீவு நாட்டின் மக்கள்தொகை என்ன தெரியுமா?

ஆறுயிரம் மட்டுமே!

158 நாடுகளைக் கொண்ட ஐ. நா. மன்றத்தில் நவுரு நாடும் ஓர் உறுப்பினர்தான்.

பிறகு ஏன் 35 இலட்சம் பேர் கொண்ட 'தமிழ் ஈழம்' தனி நாடாக இயங்க முடியாது?

குரல்கள் ! குரல்கள் ! குரல்கள் !

சர்வ தேசத்தின் கவனம் எங்கள் பிரச்சனைக்குத் திரும்ப முயற்சி செய்யுங்கள் ! அதைத்தான் நாங்கள் விரும்புகிறோம்.

அதற்கு நாங்கள் தகுதியானவர்கள்தாம். ஏனென்றால், நாங்கள் ஒடுக்கப்படும் ஒரு தேசத்தினர்.

—உமா மகேஸ்வரன் என்ற முகுந்தன் - P. L. O. T.

### உமாமகேஸ்வரனேடு முற்போக்கு சக்திகள் பேச்சு?

தமிழீழ மக்கள் விடுதலைக் கழக செயலதிபர் தோழர் உமாமகேஸ்வரனேடு (முகுந்தன்) தென்னிலங்கையைச் சேர்ந்த தீவிரவாதிகள் சிலர் ஸ்ரீலங்கா அரசுக்கெதிராக ஆயுதப்போராட்டம்நடத்துவது எவ்வாறு என்று ஆலோசனை நடாத்த தென்னிந்தியாவுக்கு சென்றுள்ளதாக காமினி திஸா நாயக்கா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

### வாகனம் கடத்தல்

ஸ்ரீலங்காவின் ரூபவாகினி கூட்டுத் தாபனத்துக்கு சொந்தமானவாகனம் ஒன்று மாங்குளம் கொக்காவில் என்ற இடத்தில் வைத்து கடத்திச் சென்றுள்ளதாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

### அச்சுவேலி தீக்கிரை

அச்சுவேலியில் ஸ்ரீலங்காவின் கூலிப்படையான இராணுவம் வீடுகளை எரித்தும் பல இலட்சக்கணக்கான பொருட்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தைப் பற்றிய பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ள இரு அரசுகளுமே சந்தர்ப்பம் கொடுக்கவில்லை.

5. மலையகத் தொழிலாளரின் சொந்த விருப்பம் பெறப் படாமலேயே குடியுரிமை அவர்கள் மீது திணிக்கப்பட்டது. இது சர்வதேச மனித உரிமை சாசனத்தின் (15-வது பிரிவின்) படி தவறானதாகும். ''எந்த மனிதனுக்கும் குடியுரிமை உண்டு. ஒருவனது குடியுரிமையைப் பறிப்பதற்கோ, அவன்மீது திணிப்பதற்கோ எவருக்கும் உரிமை இல்லை.''[4]

6. 1947-இல் இலங்கையில் மலையகத் தமிழருக்கு வாக்குரிமை வழங்கப்பட்டதானது அவர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்பதை ஏற்றுக்கொண்ட செயலாகும். பின்னர் பெரும்பான்மை பாராளுமன்ற பலத்தைக் கொண்டு அவர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்ட செயலானது மனித நாகரீகத்திற்கே ஒவ்வாததாகும்.

ஆழமாக, மனிதாபிமானத்துடன் அணுக வேண்டிய மலையகத் தமிழர் குடியுரிமை பற்றிய பிரச்னை எண்கணித ரீதியில் இலக்கங்களுடன்விளையாடுவது போல தலைகளை எண்ணுவதன் மூலம் இரு அரசுகளாலும் தீர்மானிக்கப்பட்டு அங்கும் இங்கும் எனப் பங்கிடப்பட்ட நிகழ்வானது 20-ஆம் நூற்றுண்டின் மனித வரலாற்றில் எங்குமே நிகழ்ந்ததில்லை.

## இன்றைய பொருளாதார சமூக நிலைமை

ஆரம்ப காலம் முதல் இன்று வரை மலையகத் தமிழர்களின் வாழ்வுதுன்பம் நிறைந்ததாகவே அமைந்து வந்துள்ளது. இலங்கையில் வாழ்கின்ற ஏனையசமூகத்தவருடன் ஒப்பிடும் போது இவர்களது பொருளாதார, சமூக நிலை தாழ்நததாகவே உள்ளது. இவர்களது உழைப்பு கடுமையானதாக இருந்தபோதிலும், வருமானம் வாழ்வின் குறைந்தபட்ச தேவைகளைக்கூட பூர்த்தி செய்யக்கூடியதாக அமையவில்லை. மலையகத் தமிழரிடம் தமக்கென எந்தச் சொத்துக்களும் கிடையாது. பெருந் தோட்டங்களுக்குச் சொந்தமான சிறிய ஒற்றை அறைகளிலேயே இவர்கள் குடும்பமாக வாழவேண்டியுள்ளது. இவர்களது வாழ்விடம் சுகாதாரமற்றதாக, எந்த விதத்திலும் முறையாகப் பரிபாலிக்கப்படாததாகவே உள்ளது.

மலையகத் தமிழ்க் குடும்பமொன்றின் மாத வருமானம் 200 ரூபாவிலிருந்து 500 ரூபாவுக்கு (இலங்கை நாணயம்) இடைப்பட்டதாகவே அமைந்துள்ளது. 300 ரூபாவை வறுமைக் கோட்டின் எல்லையாகக் கொண்டால், மலையகத் தமிழரில் 40 சதவீதத்தினர் வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழ்பவர்களாகவே உள்ளனர். இம் மக்களது வாழ்வியல் புள்ளி விவரங்களை ஆராயும்போது இப் பொருள் வறுமை தெளிவாகத் தெரிகின்றது. இலங்கையில் வாழ்கின்ற ஏனைய சமூகத்தினரைவிட மலையகத் தமிழரிடையே தான் நோய்வாய்ப்படும் தன்மை அதிகளவில் காணப்படுகின்றது. உடலுக்குத் தேவையான அளவு கலோரி உணவு கிடைக்காமல் பட்டினி, அரைப்பட்டினி நிலையால் பொதுவாக இவர்களது ஆரோக்கிய நிலை பாதிக்கப்படுகின்றது. இறப்பு வீதம், குழந்தை இறப்பு வீதம், கர்ப்பிணித் தாய் இறப்பு வீதம் என்பன ஏனைய சமூகத்தினரைவிட இவர்களிடையேதான் அதிகளவு காணப்படுகின்றது. கல்வி கற்கும் வசதிகள், மருத்துவ வசதிகள், பெருமளவு குறைந்த நிலையிலேயே உள்ளன. தேசிய பொருளாதார முன்னேற்றத்திற்கு வாழ் வளித்த இம் மக்களின் முன்னேற்றம் தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளது, 1972-ல் பெருந் தோட்டங்கள் ''தொழிலாளர் நலனுக்காக'' வெனத் தேசியமயமாக்கப்பட்ட பின்னர் கூட இவர்களுக்கு விடிவு கிட்டவில்லை. பதிவுக் குடிகள், நாடற்றோர்என நாமஞ்சூட்டி கிடைக்கப்பெற்றிருந்த பல உரிமைகளும் கூட மறுக்கப்பட்டன. பலர் தோட்டங்களிலிருந்தும் வெளியேற்றப்பட்டனர். கூட்டுறவு அமைப்புகளின் நிர்வாகம் என்ற பெயரில் சிங்கள அரச முதலாளித்துவ அமைப்புகளால் இவர்கள் மேலும் அடிமைப்படுத்தப் பட்டுள்ளனர்.

மலையகத் தமிழர் அனுபவித்த அனுபவித்து வருகின்ற துன்பங்கள் போதாதென்று போலும், இலங்கையில் அடிக்கடி கட்டவிழ்த்துவிடப்படுகின்ற இனக் கலவரங்கள் என்ற பெயரில் நடத்தப்படும் இனக் கொலைகள் இவர்களது மானத்தை, உடமைகளை மாத்திரமன்றி உயிரையேகூட பறித்தெடுக்கின்றன.

நிலச் சீர்திருத்த சட்டத்தைத் தொடர்ந்து 1972-ல் இடம் பெற்ற கலவரம், தேர்தலை அடுத்து 1977-ல் இடம் பெற்ற கலவரம், பின்னர் 1981 யிலும் 1983 யூலையிலும் இடம்பெற்ற வன்முறைகள் என்பனவெல்லாம், சிங்கள மக்கள்சூழ வாழுகின்ற மலையகத்தமிழரையே அதிகளவில் பாதித்துள்ளன. இவ்வாறு துன்பத்தின் எல்லைக்கே சென்றுவிட்ட இம்மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே உள்ளது.

அடுத்த இதழில் மலையகத் தமிழரின் எதிர்காலம் பற்றிய ஆய்வு இடம் பெறும்.







# இனவெறி அரசின் வெறியாட்டம்!







Printed by Astmoor Litho Ltd, 21-22 Arkwright Road, Runcorn, Cheshire.